பக்கங்கள் 30

# காலை முரசு

முழக்கம்: 03 | வள்ளுவ ஆண்டு 2058 | தை 12 திங்கட்கிழமை 26.01.2026 | அதிர்வு 179

**எழுவைதீவு வீரபத்திரர் ஆலயத்தில்**

## 20 இலட்சம் பெறுமதியான ஐம்பொன் சிலைகள் களவு

(ந.லோகதயாளன்)

யாழ்ப்பாணம், எழுவைதீவு வீரபத்திரர் ஆலயத்தில் ஐம்பொன்னால் செய்யப்பட்ட எழுந்தருளி சிலைகள் களவாடப்பட்டுள்ளன என்று 03

# அதிகார வெறியில் ஆட்சியாளர்கள் நாட்டின் அடையாளங்களே ஆபத்தில்

## அமைச்சர் லால் காந்தவின் உரையை சுட்டிக்காட்டி நாமல் எம்.பி. குற்றச்சாட்டு

தமது அரசைப் பாதுகாத்துக் கொள்வதற்காக நாட்டின் கலாசாரம், மதம், சட்டங்களுக்கு முரணாக வகையில் செயற்பட தற்போதைய ஆட்சியாளர்கள் தயாராக உள்ளமை அமைச்சர் லால் காந்தவின் உரையின் மூலம் தெளிவாகின்றது என்று ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவின் தேசிய அமைப்பாளர் நாமல் ராஜபக்ஷ எம்.பி. தெரிவித்தார்.

இது தொடர்பில் ஊடகங்களிடம் அவர் மேலும் கூறுகையில்,

“கோர்ட் அணிந்திருப்பவர்களைத் தாக்குவேன் என அமைச்சர் லால் காந்த கூறியமை சட்டத்தைத் தாக்குவதாகும். காவி அங்கி அணிபவர்களைப் பற்றி அவர்கள் கவலைப்பட மாட்டார்கள் என்றும் அவர் கூறியுள்ளார். இதன் பொருள் அரசில் உள்ளவர்கள் தங்கள் உயிர் வாழ்வுக்காக உள்ளூர் கலாச்சாரத்தையும் மதங்களையும் அழிக்கத் தயாராக இருக்கின்றனர் என்பதுதான்.

ஜனாதிபதியின் மனம் சிறிதளவு காயப்பட்டாலும், பொலிஸ்மா அதிபரும் குற்றப் புலனாய்வுத் 03



# சட்டச் சிக்கல் தீர்ந்தால் விரைவில் தேர்தல் உறுதி

## தேர்தல் ஆணைக்குழுவின் தலைவர் தெரிவிப்பு



“மாகாண சபைத் தேர்தல் முறைமையில் ஆராய்வதற்கு நாடாளுமன்றத்தால் நியமிக்க உத்தேசிக்கப்பட்டுள்ள குழுவில் முன்னிலையாகி எமது தரப்பு யோசனைகளை முன்வைக்கத் தயாராகவுள்ளோம். நடைமுறையில் காணப்படும் சட்டச் சிக்கலுக்குத் தீர்வு கண்டால் மாகாண சபைத் தேர்தலை விரைவாக நடத்தும் நடவடிக்கைகளை மேற்கொள்வோம்.”

– இவ்வாறு தேர்தல்கள் ஆணைக்குழுவின் தலைவர் ஆர்.எம்.ஏ.எல். ரத்நாயக்க தெரிவித்தார்.

மாகாண சபைத் தேர்தல் குறித்து ஊடகங்களுக்கு கருத்துத் தெரிவிக்கும்போதே அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது, 03




இலங்கைத் தமிழரசுக் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் சிறிதரனின் அரசமைப்புக் கவுன்ஸில் உறுப்பினர் பதவி தொடர்பாகக் கட்சியின் அரசியல் குழு எடுத்த தீர்மானத்திற்கு அவர் இணங்க மறுத்தமை பற்றி நேற்று என் பத்தியில் குறிப்பிட்டு இருந்தேன். அதில் கடைசியாக என் குறிப்பு பின்வருமாறு இருந்தது:-

*‘கூட்டத்தில் பங்கு பற்றிய சிறிதரன் கட்சியின் அரசியல் குழுவுக்கு அதிகாரம் எதுவும் இல்லை என்றும், அத்தகைய குழு தன்னை அரசமைப்புக் கவுன்ஸில் உறுப்பினர் பதவியில் இருந்து வெளியேறுமாறு பணிக்கும் அதிகாரமும் கொண்டது அல்ல என்றும் கடுமையாக வாதிட்டார்.*

*கூட்டத்தில் பங்கு பற்றிய இன்னொரு உறுப்பினர் சிறிதரன் அவ்வாறு* 02

# முதலாம் பக்கத் தொடர்ச்சி

**இரகசியம் பரகசியம்...**

*வாதிட்டார் என்பதை உறுதிப்படுத்தினார். அந்த வாதத்தின் அடிப்படையிலேயே அவருக்கு பதிலடி நடவடிக்கையை – தீர்மானத்தை – அரசியல் குழு எடுத்து அதை நடைமுறைப்படுத்தும் என்று கோடி காட்டினார் அந்த உறுப்பினர்.'*

– என்று நேற்று இப்பத்தியில் குறிப்பிட்டிருந்தேன்.

சிறிதரன் முன்னெடுத்த வாதத்தின் அடிப்படையிலேயே அவருக்கு இப்போது பதில் நடவடிக்கை அரசியல் குழுவால் எடுக்கப்பட்டிருக்கின்றது.

கட்சியின் அரசியல் குழுவிடமிருந்து தாம் அரசமைப்புக் கவுன்ஸிலுக்கான உறுப்பினர் நியமனத்தைப் பெறவில்லை என்ற அடிப்படையில், தம்மை அந்தப் பதவியில் இருந்து வெளியேறக் கோரும் அதிகாரம் அரசியல் குழுவுக்கு இல்லை என்று சிறிதரன் சுட்டிக் காட்டிய அதே பாணியில், 'ஆம், ஆம் அந்த அதிகாரம் எங்களுக்கு இல்லை. ஆனால் உங்களுக்குத் தந்த நாடாளுமன்ற குழுத் தலைவர் பதவியை நாங்கள் அதே போன்று திருப்பி எடுக்கலாம்' என்று காட்டி இருக்கிறார்கள் கட்சியின் அரசியல் குழுவினர்.

இந்த விடயத்தை – அரசியல் குழுவின் தீர்மானத்தை – சிறிதரனைக் கட்சியின் நாடாளுமன்றக் குழுத் தலைவர் பதவியில் இருந்து அகற்றும் முடிவை – உடனடியாக அறிவிப்பதில்லை என்றும், அவருக்கு ஒரு வார கால அவகாசம் வழங்கி, அதற்குள் அவர் அந்தப் பதவியை விட்டு விலகாமல் விட்டால் அதன் பின்னர் அந்த நடவடிக்கையை எடுப்பது என்றும்தான் அரசியல் குழுவில் தீர்மானிக்கப்பட்டதாகத் தெரிகிறது.

அந்தக் காரணத்தினால்தான் 'தீர்மானகரமான – தீர்க்கமான – முடிவு எடுத்திருக்கிறோம். உரிய சமயத்தில் அதை நடைமுறைப்படுத்துவோம்' –என்று நேற்றுமுன்தினம் இரவு சுமந்திரன் குறிப்பிட்டிருந்தார். சிறிதரனைக் கட்சியின் நாடாளுமன்றக் குழுத் தலைவர் பதவியில் இருந்து உடனடியாக நீக்கும் அறிவிப்பை வெளியிடுவதில்லை, அவருக்கான ஒரு வார கால அவகாசம் முடிந்த பின்னர் அவர் அரசமைப்பு கவுன்ஸிலில் உறுப்பினர் பதவியை அந்தக் காலத்துக்குள் ராஜினாமாச் செய்யாவிட்டால், அதற்குப் பின்னர் அந்த நடவடிக்கையை அறிவிப்பது என்றுதான் தலைவரும் செயலாளரும் தங்களுக்குள் தீர்மானித்துக் கொண்டனர் எனத் தெரிகிறது.

ஆயினும், கூட்டத்தில் பங்கு பற்றிய யாரோ மூலம் (அது சிறிதரனாகக் கூட இருக்கலாம்) விடயம் 'லீக்' ஆகி, பல மட்டங்களில் பேசப்பட்டு, நேற்று மதியம் மட்டக்களப்பில் சுமந்திரனிடம் ஊடகவியலாளர்கள் நேரடியாக – பட்டவர்த்தனமாக – நோண்டிய போது, வேற வழி இன்றித் தீர்மானத்தைப் போட்டுடைத்து இருக்கின்றார் சுமந்திரன்.

எந்த நெருக்கடி வந்தாலும் அரசமைப்புக் கவுன்ஸிலில் உறுப்பினர் பதவியை ராஜினாமாச் செய்யமாட்டேன் என்று சிறிதரன் நேற்று முன்தினம் கட்சியின் அரசியல் குழுக் கூட்டத்தில் தெளிவாகவும், உறுதியாகவும், இறுதியாகவும், திரும்பத் திரும்பவும் கூறிய காரணத்தினால், ஒரு வாரம் காலம் கொடுத்தும் அவர் அந்தப் பதவியை ராஜினாமாச் செய்யவே மாட்டார், கடைசியில் அவரை நாடாளுமன்றக் குழுத் தலைவர் பதவியிலிருந்து வெளியேற்றுவதுதான் ஒரே வழி என்று தீர்மானித்து, விடயத்தை முற்கூட்டியே வெளிப்படுத்தி இருப்பார் போலும் சுமந்திரன்.

ஆயினும், அது தெரியாமல், ஒரு வார கால அவகாசம் வழங்கப்பட்டிருப்பதை மனதில் வைத்துக் கொண்டு, இறுதித் தீர்மானம் இன்னும் எடுக்கப்படவில்லை என்று தலைவர் சி.வி.கே.சிவஞானம் நேற்று ஊடகவியலாளர்களிடம் கூறியிருக்கிறார். அதனால்தான் கட்சியின் தலைவரும் செயலாளரும் இந்த விடயத்தில் முரண்பாடான நிலைப்பாடு என்ற தொனியில் சில ஊடகங்கள் செய்தி வெளியிடும் நிலைமை ஏற்பட்டது.

கட்சியின் நாடாளுமன்றக் குழுவின் தலைவர் தெரிவு நாடாளுமன்ற உறுப்பினர்கள் மத்தியில்தானே நடக்க வேண்டும்? அதை அரசியல் குழு எப்படி தீர்மானிப்பது? சம்பந்தனின் காலத்தில் தெரிவான எம்.பிக்கள்தானே தாங்கள் ஒன்று கூடி சம்பந்தனை நாடாளுமன்றக் குழுத் தலைவராகத் தெரிவு செய்தார்கள்? – என்று ஒரு வாதம் சிறிதரனுக்கு ஆதரவான தரப்புகளினால் முன்வைக்கப்படுகின்றது.

அது உண்மைதான். சம்பந்தன் தமிழரசு கட்சியின் வீட்டுச் சின்னத்தில் போட்டியிட்டு நாடாளுமன்றுக்கு தெரிவான எம்.பிக்களின் குழுவுக்கு பல தடவைகள் தலைமை தாங்கி இருக்கிறார். அவர்கள் தமிழரசுக் கட்சியில் போட்டியிட்டாலும், தமிழ்க் கூட்டமைப்பில் அங்கம் வகித்த நான்கு கட்சிகளின் எம்.பிக்கள். அதனால்தான் அச்சமயத்தில் நாடாளுமன்ற குழுவின் தலைவரை பல்வேறு கட்சிகளையும் சேர்ந்த கூட்டமைப்பு எம்.பிக்கள் ஒன்று சேர்ந்து தெரிவு செய்தார்கள். ஆயினும், அன்றும் அந்தத் தெரிவு பற்றிய அறிவிப்பை நாடாளுமன்ற செயலாளர் நாயகத்துக்கு அவர்கள் அனைவரும் போட்டியிட்ட இலங்கைத் தமிழரசுக் கட்சியின் செயலாளர்தான் உத்தியோகபூர்வமாக அறிவித்தார்.

ஆனால், இம்முறை தெரிவு செய்யப்பட்ட தமிழரசு கட்சி உறுப்பினர்கள் எட்டு பேரும் தமிழரசு கட்சியில் போட்டியிட்ட அதே கட்சியின் வேட்பாளர்கள். அதனால்தான் கட்சியின் உயர் பீடமான அரசியல் குழு கூடி நாடாளுமன்றக் குழுத் தலைவர், நாடாளுமன்ற கொரடா போன்ற பதவிகளைத் தானே தெரிவு செய்து, கட்சிச் செயலாளர் மூலம் நாடாளுமன்ற செயலாளர் நாயகத்துக்கு அறிவித்தது.

நாடாளுமன்ற உறுப்பினர்களை அணி சேர்த்து, அரசியல் குழுவின் முடிவுக்கு எதிராக சிறிதரன் தரப்பு தனி ஆவர்த்தனம் வாசிக்க முற்பட்டாலும், கட்சி ரீதியாக அந்த எம்.பிக்கள் நெருக்கடிகளை, சிக்கல்களை எதிர்கொள்வது தவிர்க்க முடியாததாக இருக்கும். அரசியல் குழுவின் தீர்மானத்தை, அது, நாடாளுமன்றக்குழுத் தலைவராகத் தேர்வு செய்யும் நாடாளுமன்றக் குழு உறுப்பினரும் கொரடாவும் பின்பற்றும் சூழலில், ஒரு சில எம்.பிக்களை அணி சேர்த்து, தனியாவர்த்தனம் வாசிப்பது பயனுள்ளதாக அமையாது என்றே தோன்றுகின்றது.

அரசியல் குழுவின் தீர்மானத்தை இப்போதைய நிலையில் மாற்றி அமைப்பதாயின், மத்திய குழு மூலம் அதை செய்வதற்கு சிறிதரன் தரப்பு முயற்சி எடுக்க முடியும். ஆயினும் மத்திய குழுவிலும் சிறிதரனின் அரசமைப்புக் கவுன்ஸில் உறுப்பினர் செயற்பாடு தொடர்பில் காட்டமான எதிர்ப்புணர்வு பரவலாக நிலவுகின்றமையால், இன்றைய நிலையில் கட்சிக்குள் சிறிதரன் தனது கையை உடனடியாக வலிமைப்படுத்துவது சாத்தியமானதாகத் தெரியவில்லை.

கட்சியின் வழக்கை விரைந்து முடிவுக்கு கொண்டு வருவதற்கான ஓர் இணக்கப்பாட்டுக்கு அவர் சென்று, அதன் பின்னர் கட்சியின் அடுத்த மாநாட்டை கூட்டுவதற்கான ஒழுங்கு ஏற்பாடுகளை முன்னெடுத்து, அந்த மாநாடு மூலம் தன்னுடைய கைகளைப் பலப்படுத்த முடியுமா என்று சிறிதரன் தரப்பு ஆராய்வதுதான் இன்றைய நிலையில் கட்சிக்குள் இருந்து கொண்டு அவர் செய்யக்கூடிய சாத்தியமான – அவருக்கு பலன்கள் தரக்கூடிய – வழிவகையாக இருக்கும். என்ன செய்யப் போகின்றார் என்பதைப் பார்த்திருப்போம்.

இதேசமயம் நேற்று முன்தினம் நடந்த அரசியல் குழுவில் சுவாரஸ்யமான ஒரு சம்பவம் நடைபெற்றது.

சிறிதரனுக்கும் ஏனையோருக்கும் இடையில் வாக்குவாதம் நிகழ்ந்த சமயத்தில் சுமந்திரன் ஒரு கேள்வி எழுப்பினார்.

“சாமர சம்பத், தயாசிறி ஜெயசேகர என்று உங்களுக்கு எதிராகக் கருத்து வெளியிட்ட பல தரப்பினரையும் கண்டித்தும், மறுத்தும், எதிர்த்தும் பல தளங்களிலும் கருத்து வெளியிட்டு வருகிறீர்கள். ஆனால் நீங்கள் கணக்காய்வாளர் நாயகம் தெரிவில் இராணுவ அதிகாரிக்கு ஆதரவாக அரசமைப்புக் கவுன்ஸிலில் செயல்பட்டீர்கள் என்பதை தம்மிடம் ஒப்புக் கொண்டீர்கள் எனத் தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் தலைவர் கஜேந்திரகுமார் பொன்னம்பலமே முதலில் பகிரங்கமாகக் கூறியிருந்தார். அவருக்கு எதிராக மாத்திரம் ஒன்றும் சொல்லாமல் நீங்கள் அமைதி காக்கின்றீர்களே?” – என்று சுமந்திரன் கேட்டார்.

அதற்கு சீற்றத்துடன் பதில் அளித்த சிறிதரன் “கஜேந்திரகுமார் எனக்கு என்ன பொருட்டா? அவரை நான் கணக்கெடுக்கவில்லை!” – என்ற பாணியில் பதில் கூறியிருக்கிறார்.

இதேசமயம் அப்படித் தாம் இராணுவத் தரப்புக்கு ஆதரவாக வாக்களித்தார் என்பதை சிறிதரன் தம்மிடமும் தனிப்பட்ட முறையில் ஒப்புக் கொண்டார் என்று இலங்கைத் தமிழரசுக் கட்சியின் திருகோணமலை மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் குகதாசன் இதற்கு முன்னர் வவுனியாவில் நடைபெற்ற இலங்கைத் தமிழரசுக் கட்சியின் அரசியல் குழுக் கூட்டத்தில் கூறியிருந்தார். அதன் பின்னரே அரசமைப்பு கவுன்ஸிலில் இருந்து ராஜினாமாச் செய்யும்படியான பணிப்புரையை சிறிதரனுக்கு வழங்கும் முடிவை அரசியல் குழு எடுத்தது என்பது குறிப்பிடத்தக்கது

கடைசியாக ஒரு கொசுறுச் செய்தி. கட்சியின் முழு அரசியல் குழுவுமே சிறிதரனுக்கு எதிராக அணி சேர்ந்துள்ள பின்புலத்தில் சிறிதரனுக்கான ஆதரவுத் தளத்தை வெளிக்காட்டும் நோக்கோடு கிளிநொச்சியில் சுமார் ஆயிரம் பேருக்கு குறையாத இளைஞர்களை ஒன்று திரட்டி, இலங்கைத் தமிழரசு கட்சியின் கிளிநொச்சி இளைஞர் அணி மாநாட்டைக் கூட்டி, அந்த இளைஞர்கள் சிறிதரனுக்கு பின்னால் பக்கபலமாக நிற்கின்றார்கள் என்பதை நிரூபிப்பதற்கு நடவடிக்கை ஆரம்பிக்கப்பட்டு இருப்பதாக தெரிகிறது.

* * *

இலங்கைத் தமிழரசுக் கட்சியின் முன்னாள் தலைவர் அமரர் சி.மு. இராசமாணிக்கத்தின் 113 ஆவது ஜனன தின நிகழ்வு நேற்று மட்டக்களப்பு – களுவாஞ்சிகுடியில் அமைந்துள்ள சி.மு. இராசமாணிக்கம் ஞாபகார்த்த மண்டபத்தில் நடைபெற்றது. அதையொட்டியும் சில சுவாரஸிமான தகவல்கள் உண்டு. அவை பற்றி நாளை பார்ப்போம்.

# முன்பள்ளி கல்வி முறையை சீர்படுத்த அநுர அரசு சிறப்புமிக்க நடவடிக்கை!

## வடக்கு மாகாண ஆளுநர் வேதநாயகன் பாராட்டு

“இலங்கையிலுள்ள முன்பள்ளிக் கல்வி முறையைச் சீர்படுத்தி, அதனை ஒரே தரத்தின் கீழ் கொண்டுவருவதற்குத் தற்போதைய அரசு வரலாற்றுச் சிறப்பான நடவடிக்கைகளை எடுத்துள்ளது. பிரதமர் கலாநிதி ஹரிணி அமரசூரிய இதில் விசேட அக்கறை செலுத்தி வருகின்றார். இத்திட்டம் முழுமையடையும்போது முன்பள்ளி தொடர்பான பல குறைபாடுகள் தீர்க்கப்படும்.”

– இவ்வாறு வடக்கு மாகாண ஆளுநர் நா.வேதநாயகன் தெரிவித்தார்.

காரைநகர், புதுவீதியில் அமைந்துள்ள அம்பாள் முன்பள்ளியின் புதிய கட்டடத் திறப்பு விழா நேற்று ஞாயிற்றுக் கிழமை காலை 9 மணிக்கு கோலாகலமாக நடைபெற்றது. இந்நிகழ்வில் பிரதம விருந்தினராகக் கலந்துகொண்டு புதிய கட்டடத்தைத் திறந்து வைத்து உரையாற்றும்போதே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்:

“பிள்ளைகளின் ஆளுமை விருத்தியில் முன்பள்ளிக் கல்வியே முக்கிய பங்காற்றுகின்றது. அதுவே சிறந்ததொரு எதிர்காலச் சமூகத்துக்கான அத்திவாரமுமாகும். பெற்றோர்கள் பாடங்களைக் கற்பிக்கும் இடங்களை விட, நல்ல பழக்கவழக்கங்களைப் போதிக்கும் இடங்களிலேயே தங்கள் பிள்ளைகளைச் சேர்க்க வேண்டும். சிறுபராயத்தில் அவர்கள் பழகும் நற்பண்புகளே அவர்களைச் சமூகத்தில் சிறந்தவர்களாக வழிநடத்தும்.

இலங்கையில் முன்பள்ளிகள் வெவ்வேறு கற்பித்தல் முறைகளைக் கொண்



டுள்ளன. இதனைச் சீர்படுத்தி, ஒருங்கமைக்கப்பட்ட பாடத்திட்டத்தைக் கொண்டு வர அரசு நடவடிக்கை எடுத்துள்ளது.

வடக்கு மாகாண சபையால் முன்பள்ளி ஆசிரியர்களுக்கு வழங்கப்படும் கொடுப்பனவு போதாது என்பதை நான் அறிவேன். தற்போதைய நிலையில் அதனை உடனடியாக அதிகரிக்க முடியாவிட்டாலும், எதிர்காலத்தில் அரசு இதனை ஒரு நிரந்தரக் கட்டமைப்புக்குள் கொண்டு வரும்போது இப்பிரச்சினைகளுக்குத் தீர்வு கிட்டும்.

1970ஆம் ஆண்டு ஆரம்பிக்கப்பட்ட இம்முன்பள்ளி, இன்று மக்களின் பங்கேற்புடன் மிகப் பிரமாண்டமாகக் கட்டப்பட்டுள்ளது. மக்கள் பங்களிப்புடன் மேற்கொள்ளப்படும் அபிவிருத்திகள் எப்போதும் நிலைத்து நிற்கும். காரைநகர் போன்ற வரலாற்றுச் சிறப்புமிக்க பிரதேசத்தில், நவீன வசதிகளுடன் கூடிய இக்கட்டடம் அமைந்தமை மாணவர்களுக்குக் கிடைத்த வரப்பிரசாதமாகும். முன்பள்ளியின் எஞ்சியுள்ள தேவைகளை மாகாண சபையின் நிதி ஒதுக்கீட்டின் ஊடாக நிவர்த்தி செய்ய நடவடிக்கை எடுக்கப்படும்.” – என்றார்.

பிள்ளையார் சனசமூக நிலையம் மற்றும் அம்பாள் முன்பள்ளி நிர்வாகத்தினரின் ஏற்பாட்டில், சனசமூக நிலையத் தலைவர் நா.பாலகிருஷ்ணன் தலைமையில் இந்நிகழ்வு நடைபெற்றது.

விருந்தினர்கள் மங்கல வாத்தியங்களுடன் வரவேற்கப்பட்டதைத் தொடர்ந்து, புதிய கட்டடத்துக்கான பெயர்ப்பலகையை வடக்கு மாகாண ஆளுநர் மற்றும் யாழ்ப்பாண மாவட்ட செயலாளர் ஆகியோர் இணைந்து திரைநீக்கம் செய்து வைத்தனர். அதனைத் தொடர்ந்து நாடா வெட்டி கட்டடம் உத்தியோகபூர்வமாகத் திறந்து வைக்கப்பட்டது.

நிகழ்வில் மாணவர்களின் வரவேற்பு நடனம், பிள்ளையார் நடனம், கும்மி நடனம் உள்ளிட்ட கலை நிகழ்ச்சிகள் வருகை தந்தோரை வெகுவாகக் கவர்ந்தன.

இந்நிகழ்வில் சிறப்பு விருந்தினராக யாழ்ப்பாணம் மாவட்டச் செயலாளர் ம.பிரதீபனும், கௌரவ விருந்தினர்களாக காரைநகர் பிரதேச செயலாளர் திருமதி ரஞ்சனா நவரத்தினம், தீவக வலயக் கல்விப் பணிப்பாளர் திருஞானசம்பந்தன் ஞானச்சந்திரன், காரைநகர் பிரதேச சபைத் தவிசாளர் தகிருஷ்ணன் கோவிந்தராஜன், தீவக வலயக் கல்வி (முன்பள்ளிகள்) உதவிக் கல்விப் பணிப்பாளர் சிவசுப்பிரமணியம் பவானந்தன் மற்றும் ஓய்வுபெற்ற அதிபர் எஸ். கே.சதாசிவம் ஆகியோரும் கலந்து கொண்டனர்.

மேலும், பெற்றோர்கள், மாணவர்கள், நலன்விரும்பிகள் மற்றும் ஊர்ப் பொது மக்கள் எனப் பலரும் இந்த நிகழ்வில் பங்கேற்றனர்.

107 பேரின் 142 லட்சம் ரூபா பங்களிப்பில் இந்த முன்பள்ளிக் கட்டடம் அமைக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

## முதலாம் பக்கத் தொடர்ச்சிகள்

### 20 இலட்சம்...

ஊர்காவற்றுறை பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.

ஆலயத்தின் வீரபத்திரர் மற்றும் பத்திரகாளி ஆகிய இரு எழுந்தருளி ஐம்பொன் சிலைகள் கடந்த வியாழக் கிழமை அதிகாலை களவாடப்பட்டுள்ளன என்று ஆலய நிர்வாகம் தெரிவித்துள்ளது.

இந்த முறைப்பாட்டைத் தொடர்ந்து பொலிஸார் எழுவைதீவுக்குச் சென்று தீவிர விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். எனினும், சம்பவம் தொடர்பில் இதுவரை சந்தேகநபர்கள் எவரும் கைது செய்யப்படவில்லை.

களவாடப்பட்ட இரு சிலைகளின் பெறுமதி சுமார் 20 இலட்சம் ரூபா என மதிப்பிடப்பட்டுள்ளது.

### அதிகார வெறியில்..

திணைக்களமும் ஏனைய அனைத்து வேலைகளையும் நிறுத்திவிட்டு ஜனாதிபதியின் மனதை ஆற்றுப்படுத்துவதிலேயே குறியாக உள்ளனர்.

மக்கள் ‘அன்தரே’யின் கதைகளைக் கேட்டு சிரித்துக் கைதட்டியதைப் போல இன்று பொய்களை நம்பி ஏமாந்துள்ளனர். இறுதியில் அன்தரே ராஜாவான தைப் போல, இன்று ஜனாதிபதி அதிகாரத்துக்கு வந்து தனது குரோதத்தையும் பொறாமையையும் வெளிப்படுத்துகின்றார்.

இந்த அரசிடம் நிலையான ஒரு கொள்கை இல்லை. 159 நாடாளுமன்ற உறுப்பினர்களும் 159 விதமான கொள்கைகளையே கொண்டுள்ளனர்.

சர்வதேச அரச சார்பற்ற நிறுவனங்கள் மற்றும் யு. எஸ்.எய்ட் போன்றவற்றின் நிகழ்ச்சி நிரல்களை ஒரு குழு முன்னெடுக்கும் அதேவேளை, கட்சியின் ஆரம்பகாலக் கொள்கைகளை நம்பியிருந்த அடிமட்டத் தொண்டர்கள் இன்று நிர்க்கதியாகியுள்ளனர்.” – என்றார்.

### சட்டச் சிக்கல்...

“மாகாண சபைத் தேர்தலை விரைவாக நடத்த வேண்டும் என்ற நிலைப்பாட்டில் உறுதியாக உள்ளோம். தேர்தல் முறைமையில் காணப்படும் சட்டச் சிக்கலினால் மாகாண சபைத் தேர்தலை நடத்த முடியாத நிலை காணப்படுகின்றது.

மாகாண சபைத் தேர்தலில் காணப்படும் சட்டச் சிக்கலுக்குத் தீர்வு

காண்பதற்குக் கடந்த காலங்களில் நியமிக்கப்பட்ட குழுக்களுக்குப் பல யோசனைகள் மற்றும் பரிந்துரைகளை முன்வைத்துள்ளோம்.

தேர்தல் சட்டத்தில் உள்ள சிக்கலுக்கு நாடாளுமன்றத்தின் ஊடாகத் தீர்வு காணப்பட வேண்டும் என்று உயர் நீதிமன்றம் வியாக்கியானமளித்துள்ளது. ஆகவே இந்த விடயத்தில் நாடாளுமன்றம் சிறந்த தீர்மானத்தை எடுக்க வேண்டும்.

மாகாண சபைத் தேர்தலை பழைய தேர்தல் முறையிலோ அல்லது புதிய தேர்தல் முறையிலோ நடத்த வேண்டும் என்று அரசியல் தரப்பில் குறிப்பிடப்படுவதை அவதானிக்க முடிகின்றது. கடந்த காலங்களைக் காட்டிலும் தற்போது மாகாண சபைத் தேர்தல் தொடர்பில் அதிக கரிசனை கொள்ளப்பட்டுள்ளமை வரவேற்கத்தக்கது.

மாகாண சபைத் தேர்தல் தொடர்பில் ஆராய்ந்து விதப்புரைகளை முன்வைப்பதற்கு 12 பேரை உள்ளடக்கிய குழு ஒன்றை நியமிக்கும் யோசனை நாடாளுமன்றத்தில் முன்வைக்கப்பட்டு அங்கீகரிக்கப்பட்டுள்ளது. இது சிறந்ததொரு தீர்மானமாகும்.

நாடாளுமன்ற உத்தேச தெரிவுக் குழுவில் முன்னிலையாகி தேர்தல் முறைமை தொடர்பிலும், மாகாண சபைத் தேர்தல் முறைமை குறித்த யோசனைகளை முன்வைக்கவுள்ளோம். இந்தக் குழு ஊடாக ஒரு தீர்வு எட்டப்பட்டால் மாகாண சபைத் தேர்தலை விரைவாக நடத்தலாம்.

தேர்தல் முறைமையில் காணப்படும் சட்டச் சிக்கலுக்குத் தீர்வு கண்டால் மாகாண சபைத் தேர்தலை நடத்தும் நடவடிக்கைகளை விரைவாக மேற்கொள்வோம். மாகாண சபைத் தேர்தலுக்காக இந்த ஆண்டுக்கான வரவு – செலவுத் திட்டத்தில் நிதி ஒதுக்கப்பட்டுள்ளது.”– என்றார்.

# கல்விச் சீர்திருத்தங்களை அநுரவே ஒத்திவைத்தார்!

## எதிர்க்கட்சி மீது குற்றம் சுமத்துவது அடிப்படையற்றது என்கிறார் சஜித்












"கல்விச் சீர்திருத்தங்கள் நடைமுறைப்படுத்தப்படுவதை எந்தவகையிலும் எதிர்க்கட்சி தடுத்து நிறுத்தவில்லை. பாட உள்ளடக்கங்கள் தயாரிப்பிலும், அது குறித்த தீர்மானங்கள் எடுக்கப்பட்ட சந்தர்ப்பங்களிலும் எதிர்க்கட்சியின் எவ்வித பங்களிப்பும் இல்லாநிலையில், சீர்திருத்தங்கள் ஒத்திவைக்கப்பட்டமைக்கு ஐக்கிய மக்கள் சக்தியான நாமே காரணம் எனக் கூறுவது அடிப்படையற்றதாகும். கல்வி சீர்திருத்தங்களை ஜனாதிபதியே அநுரகுமார திஸாநாயக்கவே ஒத்திவைத்தார்."

– இவ்வாறு எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ தெரிவித்தார்.

எதிர்க்கட்சித் தலைவர் அலுவலகத்தில் கல்வித் துறை நிபுணர்கள் மற்றும் இதனுடன் தொடர்புடைய தரப்பினர்களுடன் நேற்றுமுன்தினம் நடைபெற்ற சந்திப்பின் போதே எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ மேற்கண்டவாறு கூறினார்.

கல்விச் சீர்திருத்தங்கள் தொடர்பில் இங்கு நீண்ட கலந்துரையாடல் இடம்பெற்றது.

"முறையாக இதனை முன்னெடுக்க வேண்டுமானால் Green Paper, White Paper களை முன்வைத்து இந்நடவடிக்கைகளை முன்தொடருமாறு ஐக்கிய மக்கள் சக்தியே கோரியது. கல்விச் சீர்திருத்தங்களை முதலில் நாமே முன்வைத்தோம். அந்தவகையில் எந்தவொரு சந்தர்ப்பத்திலும் அதனை மீளப்பெறுமாறோ அல்லது நடைமுறைப்படுத்த வேண்டாம் என்றோ நாம் கூறவில்லை.

கல்விச் சீர்திருத்தங்களை நடைமுறைப்படுத்துவதற்கு நாம் தடையாகவுள்ளதாகக் கூறப்படுவது நம்பக் கூடிய விடயமல்ல. நாட்டில் கல்விச் சீர்திருத்தம் நடைமுறைப்படுத்தப்பட வேண்டும் என்பதற்காகவே எதிர்க்கட்சியாக இருந்தாலும் பிரபஞ்சம் வேலைத்திட்டத்தின் ஊடாக தேர்ந்தெடுக்கப்பட்ட பாடசாலைகளுக்கு நவீன ஸ்மார்ட் வகுப்பறை உபகரணங்களை வழங்கிக் கொண்டிருக்கின்றோம்." – என்று எதிர்க்கட்சித் தலைவர் தெரிவித்தார்.

"ஆசிரியர்களுக்கான பயிற்சி வழங்குவதில் காணப்படும் பிரச்சினைகள், தொழில்நுட்பப் பிரச்சினைகள் போன்றவற்றைத் தவிர்த்து, 2027ஆம் ஆண்டுக்குள் இந்த விடயங்கள் முன்னெடுக்கப்படும் என்றும் ஜனாதிபதியே முடிவை எடுத்தாரே தவிர, எதிர்க்கட்சி இந்த விடயங்களில் ஈடுபடவில்லை.

கல்விச் சீர்திருத்தம் நடைமுறைப்படுத்தப்படும் என்பதில் மிகுந்த ஆர்வத்துடன் இருந்தோம்.

எதிர்க்கட்சியால் கல்விச் சீர்திருத்தம் நடைமுறைப்படுத்துவதை நிறுத்த முடியுமா? அதிபர்கள், ஆசிரியர்கள் அல்லது மாணவர்களை வீதிக்கு இறக்கி, இவற்றை எதிர்க்குமாறு ஐக்கிய மக்கள் சக்தி எந்தவொரு சந்தர்ப்பத்திலும் கூறவில்லை. நாம் அவ்வாறு ஒருபோதும் செய்யவும் இல்லை.

ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்க அவரது முகநூல் பதிவில் கல்விச் சீர்திருத்தங்கள் தொடர்பில் குறிப்பிட்டிருக்கின்றார். அதில் தரம் 6 இற்கான சீர்திருத்தங்கள் ஒத்திவைக்கப்படுவதாகவும் அவரே தெரிவித்துள்ளார்.

எனவே, சீர்திருத்தங்களை ஒத்திவைத்தது நாம் அல்ல, ஜனாதிபதியே என்பதைப் பெற்றோர் புரிந்துகொள்ள வேண்டும். அவை காலம் தாழ்த்தப்பட்டுள்ளமைக்கும் எமக்கும் எவ்வித தொடர்பும் இல்லை. ஆரம்பத்திலிருந்தே இதனை முறையாக முன்னெடுத்திருந்தால் இன்று இந்தத் தீர்மானத்தை எடுக்க வேண்டியேற்பட்டிருக்காது." – என்றும் எதிர்க்கட்சித் தலைவர் குறிப்பிட்டார்.

"தரம் 6 ஆங்கில பாட விடயதான தயாரிப்புப் பணிகளில் எதிர்க்கட்சி உறுப்பினர்களோ எனது அதிகாரிகள் குழுவோ பங்கேற்கவில்லை. டீரனனல நெவ தொடர்பில் புதிதாக ஒன்றையும் கூறவேண்டியதில்லை. இந்த வலைத்தளத்துடன் பாட அலகுகளை உருவாக்கும் செயற்பாட்டில் எதிர்க்கட்சி ஈடுபடவில்லை. இது தயாரிக்கப்படும் போது 12 சந்தர்ப்பங்களில் மீளாய்வுக்குட்படுத்தப்படுகின்றன. அவ்வாறிருந்தும் பொறுத்தமற்ற ஒரு இணையதளத்தின் முகவரி எவ்வாறு பாடநூலில் உள்ளடக்கப்பட்டது? இதற்கும் எதிர்க்கட்சிக்கும் எவ்வித தொடர்பும் இல்லை எனும் போது எவ்வாறு சீர்திருத்தங்கள் எம்மால் தடைபட்டுள்ளதாகக் கூற முடியும்? எனவே, இதனை பெற்றோர் தெளிவாகப் புரிந்துகொள்ள வேண்டும்."

– என்றும் எதிர்க்கட்சித் தலைவர் இங்கு மேலும் தெரிவித்தார்.

"இந்தத் தவறைத் தான் நாம் சுட்டிக்காட்டினோம். அதனைவிடுத்து சீர்திருத்தங்களை நிறுத்துமாறு நாம் கோரவில்லை. ஜனாதிபதி இது தொடர்பில் ஆராய்ந்த சமயத்தில் இன்னும் பல குறைபாடுகள் இதில் காணப்பட்டதனால், இந்தச் சீர்திருத்த நடவடிக்கைகளை ஒருவருடத்துக்குக் காலம் தாழ்த்துவதாக அறிவித்து விட்டு, எதிர்க்கட்சிதான் இதற்குக் காரணம் என்ற வகையில் சமூக ஊடகங்களில் பொய்களைப் பரப்பினார்.

எதிர்க்கட்சிதான் இந்தச் சீர்திருத்தங்களை நிறுத்தியது என்று அரசு கூறினால், அது ஜனாதிபதி மற்றும் பெரும்பான்மையைக் கொண்ட அரசை விட எதிர்க்கட்சிக்கு அதிக அதிகாரம் இருப்பதைக் காட்டுகின்றது என்றும் எதிர்க்கட்சித் தலைவர் கூறினார்.

"தேர்தல் மேடைகளில் நாம் ஆங்கில மொழிக் கல்வி மற்றும் தகவல் தொழில்நுட்பக் கல்வி தொடர்பில் பிரஸ்தாபித்த போது, மக்கள் எம்மை நம்பாமல் தற்போதைய அரசுக்கு வாக்களித்தனர். ICT பாட அலகை நாம் 6 ஆம் தரத்தில் இருந்தே இங்கு ஆரம்பிக்கின்றோம். உலக நாடுகளில் K to 12 வரை ICT கற்பிக்கப்பட்டு வருகின்றது. நமது நாட்டில் 6 ஆம் தரம் முதலே ICT கற்பிக்கப்படுகின்றது. இது தவறான நடவடிக்கையாகும். தகவல் தொழில்நுட்பப் பாடங்களைக் கற்பிக்கப் போதுமான வளங்களும் வசதிகளும் கிராமப் புற பாடசாலைகளில் இல்லை. இங்கு வளப் பற்றாக்குறை ஏற்பட்டு, கல்வியில் ஏற்றத்தாழ்வு ஏற்பட்டு காணப்படுகின்றன." – என்றும் எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ இங்கு மேலும் தெரிவித்தார்.



# சுழிபுரம் முகாமில் இருந்து வெளியேறியது இராணுவம்

யாழ்ப்பாணம், சுழிபுரம் பகுதியில் கடந்த 30 ஆண்டு காலமாக முகாமிட்டிருந்த இராணுவத்தினர், அந்த முகாமை விட்டு முழுமையாக வெளியேறியுள்ளனர்.

இராணுவத்தினர் அந்த இடத்தை விட்டு விரைவில் வெளியேறுவார்கள் என்று 513ஆவது காலாட்படைப் பிரிவின் கட்டளைத் தளபதி, சங்கானை பிரதேச செயலருக்கு அண்மையில் தெரியப்படுத்தியிருந்தார். இதற்கு அமையவே, அந்த முகாமில் இருந்து இராணுவத்தினர் கடந்த வெள்ளிக்கிழமை வெளியேறியுள்ளனர்.

அத்துடன், பண்டத்தரிப்பு பகுதியில் உள்ள இராணுவ முகாமில் இருந்தும் விரைவில் இராணுவத்தினர் வெளியேறவுள்ளனர் என்று தகவல்கள் வெளிவந்துள்ளமை குறிப்பிடத்தக்கது.




# தெல்லிப்பளை ஆதார மருத்துவமனை அத்தியட்சகருக்கு எதிராக விசாரணை!

தெல்லிப்பளை ஆதார மருத்துவமனையின் அத்தியட்சகருக்கு எதிராக, மருத்துவ அதிகாரிகள் முறைப்பாடுகளுக்கு அமைய விசேட குழுவொன்று விசாரணைகளை மேற்கொண்டுள்ளது.

வடக்கு மாகாண ஆளுநரால் அமைக்கப்பட்ட குழுவே இந்த விசாரணைகளை முன்னெடுத்துள்ளது.

மருத்துவமனை வாகனங்கள், எரிபொருள் பயன்பாடுகள், மருத்துவமனையில் இடம்பெற்றதாகக் கூறப்படும் ஊழல்கள் மற்றும் மோசடிகள் தொடர்பில் இந்த விசாரணைகள் இடம்பெற்றுள்ளன என்று நம்பகரமான முறையில் அறியமுடிகின்றது.

இதேவேளை, மருத்துவ அத்தியட்சகரைப் பாதுகாக்கும் நோக்கில் அரசியல் தலையீடு செலுத்தப்படுகின்றது என்று மருத்துவ அதிகாரிகள் சங்கத்தினர் குற்றஞ்சாட்டியுள்ளனர்.

விசாரணைக்குழுவின் பரிந்துரைக்கு அமைய நீதியான முறையில் நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும் என்றும் மருத்துவ அதிகாரிகள் சங்கத்தினர் மேலும் கூறியுள்ளனர்.



### சட்டவிரோதமாக கால்நடைகள் கடத்தல்:

# கைது நடவடிக்கையில் துப்பாக்கிச்சூடு! காயமடைந்த நபர் மருத்துவமனையில்!!

சட்டவிரோதமாகக் கால்நடைகளைக் கொண்டு செல்ல முயன்ற குழுவைக் கைது செய்ய முயன்றபோது இடம்பெற்ற துப்பாக்கிச்சூட்டில் நபர் ஒருவர் படுகாயமடைந்த நிலையில் மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டுள்ளார் என்று பொலிஸார் தெரிவித்தனர்.

இந்தச் சம்பவம் நேற்று அதிகாலை 2.35 மணியளவில் தலஹேன சந்திக்கு அருகில் இடம்பெற்றுள்ளது.

நல்லா காவல் நிலையத்தைச் சேர்ந்த மூன்று அதிகாரிகள் ரோந்துப் பணியில் ஈடுபட்டிருந்தபோது, தலஹேன கிராமத்துக்குள் நுழையும் சாலையின் அருகே சந்தேகத்துக்கிடமான முறையில் நிறுத்தப்பட்டிருந்த லொறியொன்றைச் சோதனை செய்துள்ளனர்.

அந்த நேரத்தில், ஐந்து பேர் லொறியில் கால்நடைகளை ஏற்றிச் சென்றனர் என்று கூறப்படுகின்றது.

பொலிஸ் அதிகாரிகள் சம்பவ இடத்தை நெருங்கியதும், லொறியில் இருந்த ஒருவர் அதிகாரிகளைத் தாக்க முயன்றுள்ளார். மேலும் நிலைமையைக் கட்டுப்படுத்த ஒரு பொலிஸ் சார்ஜன்ட் துப்பாக்கிப் பிரயோகம் மேற்கொண்டுள்ளார்.

துப்பாக்கிச்சூட்டில் கந்தானை பகுதியைச் சேர்ந்த நபர் ஒருவர் காயமடைந்த நிலையில் மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

லொறியில் இருந்த மற்ற 4 சந்தேக நபர்களும் அந்தப் பகுதியை விட்டு தப்பிச் சென்றுள்ளனர் எனவும், அவர்களைக் கைது செய்ய மேலதிக விசாரணைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன என்றும் தெரிவிக்கப்படுகின்றது.

# 13 கோடி ரூபா போதைப்பொருளுடன் கட்டுநாயக்கவில் மூவர் சிக்கினார்கள்

கட்டுநாயக்க சர்வதேச விமான நிலையத்தில் நேற்று அதிகாலை மேற்கொள்ளப்பட்ட விசேட சோதனைகளின் போது, சுமார் 13 கோடியே 39 இலட்சத்து 40 ஆயிரம் ரூபா பெறுமதியான 'குஷ்' மற்றும் 'ஹஷிஷ்' போதைப்பொருட்களுடன் மூவர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

ஓமானின் மஸ்கட் நகரிலிருந்து நேற்று அதிகாலை 4 மணியளவில் 'சலாம் எயார்' நிறுவனத்துக்குச் சொந்தமான ஓ.வி. 437 என்ற விமானம் மூலம் வந்திறங்கிய பயணிகளையே இலங்கை சுங்கத்தின் போதைப்பொருள் தடுப்புப் பிரிவினர் கைது செய்தனர்.

சந்தேகநபர்கள் கொண்டு வந்த 5 பயணப் பொதிகளைத் தீவிர சோதனைக்கு உட்படுத்திய போது, மறைத்து வைக்கப்பட்டிருந்த பின்வரும் போதைப் பொருட்கள் கண்டெடுக்கப்பட்டன.

இதன்போது:-

* 10 பார்சல்களில் இருந்த 10 கிலோ 394 கிராம் "குஷ்" போதைப் பொருள்.
* 18 பார்சல்களில் இருந்த 1 கிலோ 912 கிராம் "ஹஷீஷ்" போதைப் பொருள். ஆகியன சுங்க அதிகாரிகளால் கைப்பற்றப்பட்டன.



கைது செய்யப்பட்டவர்களில் இருவர் நாத்தாண்டியா பகுதியைச் சேர்ந்த 29 வயதுடைய வர்த்தகர் மற்றும் கட்டடத் தொழிலாளி என அடையாளம் காணப்பட்டுள்ளனர்.

மற்றைய நபர் கிராண்ட்பாஸ் பகுதியைச் சேர்ந்த 32 வயதுடைய வர்த்தகர் எனத் தெரியவந்துள்ளது.

இவர்கள் அனைவரும் மேலதிக விசாரணைகளுக்காக விமான நிலைய பொலிஸ் போதைப்பொருள் தடுப்புப் பிரிவினரிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளனர்.

நமது கருத்து

உலகத் தமிழர்களின் உறவுப்பாலம்

259, கோவில் வீதி, நல்லூர், யாழ்ப்பாணம்.
தொலைபேசி :- 021 222 3570
மின்னஞ்சல்:-murasunews2023@gmail.com

# இணக்கம் வருமா?

ஜனாதிபதியின்பரிந்துரைகளைஅரசமைப்புக் கவுன்ஸில் தொடர்ந்து நிராகரித்து வந்த நிலையில் நாட்டின் கணக்காய்வாளர் நாயகம் நியமனம் கடந்த பதினொரு மாதங்களாக இழுபறிப்படுகின்றது. கடந்த டிசம்பர் 6 ஆம் திகதிக்குப் பின்னர் அந்தப் பதவி முற்றாக வறிதாகி உள்ளது. பதில் நிலைக்குக் கூட ஒருவரும் நியமிக்கப்படவில்லை.

இந்த நெருக்கடியினால் கணக்காய்வாளர் நாயகம் திணைக்களத்தில் - தேசிய கணக்காய்வாளர் அலுவலகத்தில் - பணியாளர்களுக்கு சம்பளம் கூட வழங்க முடியாத நெருக்கடி நிலை வந்திருப்பதாகத் தெரிகிறது.

வழக்கமாக வரவு - செலவுத் திட்டம் மூலம் அரசு ஊழியர்களுக்கான வேதனம் உள்பட அனைத்துக் கொடுப்பனவுகளுக்குமான நிதி ஒதுக்கீடு செய்யப்படுகின்றது.

அதன் பின்னர் அரச நிதியை செலவிடுவதற்கான அதிகாரத்தை நிதி அமைச்சர், நிதி அமைச்சின் செயலாளருக்கு பகிர்ந்தளிக்கின்றார். அவர் அந்த ஒழுங்கு முறையை ஏனைய அமைச்சுக்களின் செயலாளர்களுக்கு கையளிக்க, அந்தப் படிமுறை ஊடாக அரச செலவினம் கீழ் மட்டம் வரை செலவிடப்படுகின்றது.

ஆனால் தேசியக் கணக்காய்வு அலுவலகம் அத்தகையது அல்ல. அது சுயாதீனமான கட்டமைப்பு. அதற்கான செலவினங்களைக் கையாளும் நிதி அதிகாரம் நேரடியாக அதன் தலைவரான கணக்காய்வாளர் நாயகத்துக்கு வழங்கப்படுகின்றது.

ஆனால் கடந்த டிசம்பர் 6ஆம் திகதியில் இருந்து தேசிய கணக்காய்வாளர் அலுவலகம் ஒரு சதம் நிதியை கூட செலவிட முடியாத இக்கட்டில் மாட்டி நிற்கின்றது. அதுவரை பதில் கணக்காய்வாளர் நாயகமாக இருந்தவரின் பொறுப்பையும் அப்பதவியில் தொடர அரசமைப்புக் கவுன்ஸில் இடமளிக்கவில்லை.

கணக்காய்வாளர் நாயகம் ஒருவரை நிரந்தரமாக நியமிப்பதற்கு சரியான பரிந்துரைகளைச் செய்து நடவடிக்கை எடுக்க ஜனாதிபதி தவறி வரும் நிலையில், தொடர்ந்து அந்தப் பதவிக்கு பதில் கடமையாற்ற எவருக்கும் அனுமதி அளிக்கவும் மறுத்துவிட்டது அரசமைப்புக் கவுன்ஸில். அதனால் இந்த விவகாரம் நெருக்கடியாக-பூதாகரமாக-உருவெடுத்தது. தேசிய கணக்காய்வாளர் அலுவலக ஊழியர்களுக்கு சம்பளம் கூட வழங்க முடியாத இக்கட்டு உருவானது.

இந்தச் சூழ்நிலையில் நிதி அமைச்சு அவசரமாகத் தலையிட்டு மேற்படி தேசிய கணக்காய்வு அலுவலகத்தின் நிதி விடயங்களைக் கையாளும் பொறுப்பை பிரதி கணக்காய்வாளர் நாயகத்திடம் தற்காலிகமாகவேனும் ஒப்படைக்க நடவடிக்கை எடுத்திருப்பதாக இப்போது தகவல்கள் வெளியாகி இருக்கின்றன.

அரசமைப்பு கவுன்ஸிலுக்கு புதிதாக மூன்று சிவில் சமூகப் பிரதிநிதிகள் நியமிக்கப்பட்டுள்ள நிலையில் ஜனாதிபதிக்கும் அரசமைப்பு கவுன்ஸிலுக்கு இடையில் புதிய கணக்காய்வாளர் நாயகத்தை நியமிப்பதற்கு இணக்கம் வருமா என்று எல்லோரும் எதிர்பார்த்திருக்கின்றார்கள். நடக்குமா? தெரியவில்லை. பார்த்திருப்போம்.






# மடுல்சீமையில் சின்னப்பர் ஆலய உற்சவம்

**(பசறை: நடராஜா மலர்வேந்தன்)**

மடுல்சீமை பங்கின் புனித வனத்து சின்னப்பர் ஆலய வருடாந்தத் திருவிழா பங்குத் தந்தை அருட்பணி மரியதாஸ், உதவி பங்குத் தந்தை அருட்பணி ஜவன் ரொட்ரிகோ ஆகியோரின் தலைமையில் நேற்று ஞாயிற்றுக்கிழமை சிறப்பாக நடைபெற்றது.

இந்தத் திருப்பலி வழிபாட்டில் மடுல்சீமை பங்கின் பெருந்திரளான இறைமக்கள் இறையுணர்வோடு பங்கு பற்றினர்.

நேற்றைய தினம் நடைபெற்ற நற்கருணை ஆராதனையில் பதுளை மறைமாவட்ட ஆயர் அதி வணக்கத்துக்குரிய ஜூட் நிசாந்த சில்வா அடிகளாரும் மறை மாவட்டத்தில் பணியாற்றும் பங்கு குருக்கள், அருட்சகோதரிகள் எனப் பலரும் பங்கேற்றிருந்தமை சிறப்பம்சமாகும்.

முன்னைய வாரம் ஞாயிற்றுக்கிழமை கொடியேற்றத்துடன் ஆரம்பமாகிய வனத்து சின்னப்பரின் வருடாந்த திருவிழாவில் நவநாள் திருப்பலிகள் நடைபெற்றமையோடு நேற்றைய தினம் திருவிழாத் திருப்பலி இனிதே ஒப்புக் கொடுக்கப்பட்டது.
















# செம்பியன்பற்று வடக்கில் நேற்றுக் காப்புப் பாடி ஆரம்பிக்கப்பட்டது தென் மோடி நாட்டுக்கூத்து!

(பூ.லின்ரன்)

செம்பியன் பற்று வடக்கு புனித பிலிப்பு நேரியார் ஆலயத்தில் அண்ணாவியார் கலைச்சாரம் றோக்கு யூட்சன் செபசின்ரன் அவர்களின் நெறிப்படுத்தலிலான யுவானியர் தென் மோடி நாட்டுக்கூத்தின் காப்புப் பாடல் ஆலயத்தில் செம்பியன் பற்று பங்கு மக்கள் முன்னிலையில் நேற்று மாலை 5 மணிக்குப் பாடப்பட்டு ஆரம்பிக்கப்பட்டது.

இந்தத் தென் மோடி நாட்டுக்கூத்து, வரலாற்றுச் சிறப்பு மிக்க புனித பிலிப்பு நேரியார் ஆலய திருவிழாவான எதிர்வரும் மே மாதம் 26 ஆம் திகதியன்று பிற்பகல் 9:30 மணியளவில் மேடையேறவுள்ளது.

செம்பியன் பற்று பங்கு மக்களின் வரலாற்று ரீதியாக இடம் பெற்று வரும் பாரம்பரிய நிகழ்வான புனித செபஸ்தியார் திருவிழாவின் விருந்து உபசார நிகழ்வும் செம்பியன் பற்று பங்கு தந்தை ஜஸ்டின் ஆதர் தலைமையில் நேற்றைய தினம் காப்பு பாடுதலை தொடர்ந்து மிக சிறப்பாக இடம் பெற்றது.

இந்த நிகழ்வில் வடமராட்சி கிழக்கு பகுதி முழுவதும் இருந்து பல்லாயிரக் கணக்கான மக்கள் பங்கு கொண்டனர்.

















# முல்லைத்தீவில் பட்டத் திருவிழா

(பா.சதீசன்)

வட்டுவாகல் புலம்பெயர் உறவுகளும் வட்டுவாகல் மக்களும் இணைந்து ஏற்பாடு செய்த மாபெரும் பட்டத் திருவிழா நேற்றைய தினம் பிற்பகல் 2 மணி முதல் முல்லைத்தீவு சுற்றுலா மைய நகரக் கடற்கரையில் சிறப்பாக நடைபெற்றது.

பிரதம அதிதிகளாக வன்னி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் து.ரவிகரன், முல்லைத்தீவு மாவட்ட அரசாங்க அதிபர் அ.உமாமகேஸ்வரன் ஆகியோர் கலந்து சிறப்பித்தனர். இவர்களோடு கரைதுறைப்பற்று பிரதேச சபையின் தவிசாளர் மற்றும் செயலாளர் ஆகியோரும் கலந்துகொண்டனர்.

சிறுவர்களுக்கு சிறந்த பொழுதுபோக்கை ஏற்படுத்திடும் நோக்கிலும், சமூக மயமாக்கலை ஒருங்கிணைக்கும் நோக்கிலும் இந்தப் பட்டத்திருவிழா ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது.

இதில் பெருந்திரளான மக்கள் கலந்துகொண்டனர். ஐந்நூறுக்கும் மேற்பட்ட பட்டங்களும் பறக்கவிடப்பட்டன. விசேடமாக சிறார்களை ஊக்குவிக்கும் நோக்கில் பட்டங்களும் வழங்கி வைக்கப்பட்டன.











# சமூக செயற்பாட்டாளர்களுக்கான செயலமர்வு

(த.சுபேசன்)

பால்நிலை சமத்துவம், பாலியல் மற்றும் இனப்பெருக்க சுகாதார உரிமைகள் குறித்த புரிதலின் ஊடாக சமாதானம் மற்றும் சமூக ஒருமைப்பாட்டை ஏற்படுத்தும் நோக்கோடு இளம் விவசாயிகள், கடற்றொழிலாளர்கள் மற்றும் சமூக செயற்பாட்டாளர்களுக்கான செயலமர்வு ஒன்று நேற்று ஞாயிற்றுக் கிழமை யாழ்ப்பாணத்தில் ஆரம்பமாகி இடம்பெற்று வருகின்றது. இன்றும் அது தொடர்ந்து நடைபெறும்.



ஜெசாக் மற்றும் ஏ.டி.ரி(ADT) நிறுவனங்களின் கூட்டிணைவோடு ஐ.என்.ஓ.(INO) மற்றும் யு.என்.எவ்.பி.ஏ.(UNFPA) நிறுவனங்களுடைய நிதிப்பங்களிப்பில் இடம்பெறும் இந்த இருநாள் செயலமர்வில் பிரதம விருந்தினராக வடக்கு மாகாண விவசாயம் மற்றும் மீன்பிடித்துறை அமைச்சின் செயலாளர் ச.சிவஸ்ரீகலந்து சிறப்பித்திருந்தார்.

மேலும் ஜெசாக் நிறுவன பிரதம நிறைவேற்று அதிகாரி என்.சுகிர்தராஜ், ஏ.டி.ரி. நிறுவன செயற்பாட்டாளர் பேபன் மிச்செல், ஏ.டி.ரி. நிறுவன ஒருங்கிணைப்பாளர் சட்டத்தரணி ஜீவனி காரியவசம், வளவாளர் பாலமுரளி ஆகியோரும் கலந்து சிறப்பித்திருந்தனர்.

இதன்போது யாழ் மாவட்டத்தைச் சேர்ந்த இளம் விவசாயிகள்,கடற்றொழிலாளர்கள்,சமூக செயற்பாட்டாளர்கள் கலந்து கொண்டிருந்தனர்.

# தென்னிந்தியக் கலைஞர்களின் நடன நிகழ்ச்சி சாவகச்சேரி நகராட்சி பொன்விழா மண்டத்தில்

(த.சுபேசன்)

சாவகச்சேரி நகராட்சி மன்றமும் யாழ் இந்திய துணைத் தூதரகமும் இணைந்து தென்மராட்சி மண்ணில் முதன்முறையாக நடத்துகின்ற “தென்னிந்தியக் கலைஞர்களின் சாஸ்திரிய ஆற்றுகை” எனும் நடன நிகழ்வு நாளை செவ்வாய்கிழமை மாலை 5.30 மணிக்கு நகராட்சி மன்றத்தின் பொன்விழா மண்டபத்தில் இடம்பெறவுள்ளது.

இந்நிகழ்வில் யாழ் இந்தியத் துணைத் தூதுவர் சாய் முரளி அவர்கள் பிரதம விருந்தினராக கலந்து சிறப்பிக்க வுள்ளார்.

நிகழ்வில் தென்னிந்திய கலைஞர்களின் கதகளி மற்றும் மோகினியாட்டம் ஆகிய ஆற்றுகைகள் இடம்பெறவுள்ளன.

தென்மராட்சி மண்ணில் முதன்முறையாக இடம்பெறும் தென்னிந்திய கலைஞர்களின் ஆற்றுகையினை கண்டுகளிக்க வருமாறு சாவகச்சேரி நகராட்சி மன்றத்தினர் அழைப்பு விடுத்துள்ளனர்.

# கிவுல் ஓயாத் திட்டத்திற்கு எதிர்ப்புத் தெரிவித்து வெள்ளியன்று வவுனியா வடக்கில் ஆர்ப்பாட்டம்!

## பொது அமைப்புகளுடன் நாளை கலந்துரையாடல்

(கி.வசந்தன்)

அரசாங்கத்தினால் வவுனியா வடக்கில் மேற்கொள்ளப்படவுள்ள கிவுல் ஓயா திட்டத்திற்கு எதிர்ப்பு தெரிவித்து தமிழ் கட்சிகளினால் 30 ஆம் திகதி மாபெரும் ஆர்ப்பாட்டம் ஒன்று நடத்தப்பட உள்ளது.



தமிழர் பகுதிகளை ஆக்கிரமித்து கிவுல்ஓயா திட்டமானது அரசாங்கத்தின் மில்லியன் கணக்கான நிதி ஒதுக்கீட்டோடு மேற்கொள்ளப்பட உள்ளது.

இந்நிலையில் தமிழ் கட்சிகள் ஒன்றிணைந்து குறித்த திட்டத்திற்கு எதிர்ப்பு தெரிவித்து வவுனியா வடக்கில் எதிர்வரும் 30 ஆம் திகதி பாரிய ஆர்ப்பாட்டம் ஒன்றினை மேற்கொள்வதற்கு திட்டமிட்டுள்ளது.

இந்நிலையில் பொது அமைப்புகள் உடனான கலந்துரையாடல் ஒன்றினை தமிழ் கட்சிகள் 26 ஆம் திகதி தமிழரசு கட்சியின் அலுவலகத்தில் மேற்கொள்வதற்கு தீர்மானித்துள்ளன.



# வடக்கு முதலீட்டு உச்சிமாநாட்டை இங்கு வெற்றிகரமாக வெளிச்சப்படுத்தினோம்



ராஜ் சிவநாதன்

வடக்கு முதலீட்டு உச்சிமாநாட்டை (Northern Investment Summit) முன்னெடுத்ததில் எனது பங்கு மற்றும் அதன் பொது வெளிச்சப்படுத்தல் செயல் முறை குறித்துக் கருத்துப் பரிமாற விரும்புகிறேன்.

வடக்கு முதலீட்டு உச்சி மாநாட்டை ஊக்குவிப்பதில், குறிப்பாக செய்தித்தாள்கள் மற்றும் முதன்மை ஊடகங்கள் வழியாக அதன் செய்தியை மக்களிடம் கொண்டு சேர்ப்பதில் நான் மேற்கொண்ட பங்கு, இந்த முயற்சியில் நீடித்த முறையில் ஈடுபட எனக்கு முதன்மையான ஊக்கமாக அமைந்தது.

ஆரம்பத்திலிருந்தே, இத்தகைய உச்சிமாநாட்டின் வெற்றி அதன் உள்ளடக்கம் மற்றும் கட்டமைப்பில் மட்டுமல்ல, அதன் தொலைநோக்கும் நோக்கமும் பொதுமக்கள், முதலீட்டாளர்கள் மற்றும் வெளிநாட்டு புலம்பெயர் சமூகத்திடம் எவ்வளவு திறம்பட எடுத்துச் செல்லப்படுகின்றன என்பதிலேயே தங்கியுள்ளது என்பதை நான் உணர்ந்திருந்தேன்.

வடக்கு முதலீட்டு உச்சிமாநாடு, வுஆஊ கொழும்பு மற்றும் வுஆஊ யாழ்ப்பாண அணிகளால் ஒரு வருடத்திற்கு முன்பே மிகச் சீராகவும் திட்டமிட்ட முறையிலும் வடிவமைக்கப்பட்டது. புதிதாக இணைந்த பிளாட்டினம் உறுப்பினராக, இந்த முயற்சியின் தெளிவான கருத்தாக்கம், தொழில்முறை திட்டமிடல் மற்றும் வடக்கு மாகாணத்தை ஒரு வளர்ந்து வரும் முதலீட்டு மையமாக மீளமைக்கும் நீண்டகால அபிவிருத்தி நோக்கம் ஆகியவை எனக்கு ஆழ்ந்த ஈர்ப்பை ஏற்படுத்தின. இது திடீரென ஏற்பாடு செய்யப்பட்ட ஒரு நிகழ்வல்ல மாறாக, கவனமான திட்டமிடல், பங்குதாரர் ஆலோசனைகள் மற்றும் நிறுவன மட்ட ஒருங்கிணைப்பின் விளைவாக உருவான ஒரு முயற்சியாகும்.

யாழ்ப்பாணத்தின் மகனாகவும், தமிழ் புலம்பெயர் சமூகத்தின் உறுப்பினராகவும், இந்த முயற்சியை ஆதரித்து முன்னெடுத்துச் செல்ல வேண்டிய தனிப்பட்டதும் குடிமகத்துவ சார்ந்ததும் பொறுப்பு எனக்குள் வலுவாக உணரப்பட்டது. அதனால், எனது ஊடகத் தொடர்புகளை முழுமையாக பயன்படுத்தி, எனது நேரத்தையும் முயற்சியையும் ஒதுக்கி, இந்த உச்சி மாநாடு மிக விரிவான மக்கள்தொகையை சென்றடைய வேண்டும் என்ற தெளிவான முடிவை எடுத்தேன். இதற்காக ஏற்பாட்டாளர்களுடன் தொடர்ச்சியான ஒருங்கிணைப்பு, உச்சிமாநாட்டின் நோக்கங்களுக்கு ஏற்ற வகையில் செய்தி ஒருங்கிணைப்பு, உள்ளூர் மற்றும் சர்வதேச பங்குதாரர்களிடையே நம்பிக்கையை உருவாக்கும் வகையில் உரையாடலை வடிவமைத்தல் போன்ற பணிகளில் ஈடுபட்டேன்.

எனது பங்களிப்பு பெரும்பாலும் மூலோபாய விளம்பரம் மற்றும் உள்ளடக்க உருவாக்கத்தை மையமாகக் கொண்டது. ஓர் எழுத்தாளராக, அச்சு மற்றும் மின்னணு ஊடகங்கள் வழியாக ஒரே தன்மை கொண்ட செய்திகளை உருவாக்கி பரப்பும் பொறுப்பை நான் ஏற்றேன். உச்சிமாநாட்டின் நோக்கங்கள், அதன் நம்பகத்தன்மை மற்றும் வடக்கு மாகாணத்திற்கு அது கொண்டுவரும் முக்கியத்துவம் ஆகியவை தெளிவாக வெளிப்படும் வகையில் செய்திகளை வடிவமைத்தேன். நிகழ்வுக்கு முன்பும், நிகழ்வு நடைபெறும் காலத்திலும், அதன் பின்னரும் தொடர்ச்சியான ஊடக கவனத்தை உருவாக்குவதன் மூலம், இந்த உச்சிமாநாட்டை ஒரு பிராந்திய முயற்சியிலிருந்து தேசிய மற்றும் சர்வதேச அளவிலான விவாதப் பொருளாக மாற்றுவதில் நான் பங்களித்தேன்.

இந்த வெளிச்சப்படுத்தல் முயற்சியில் தீர்மானமான பங்கு வகித்த ஊடக நிறுவனங்களுக்கும் தனிநபர்களுக்கும் எனது மனப்பூர்வமான நன்றியை பதிவு செய்வதை நான் கடமையாகக் கருதுகிறேன். காலைமுரசு,மாலைமுரசு மற்றும் அதன் ஆசிரியர், நண்பர் வித்தியாதரன் அவர்களுக்கு அவருடைய நிலையான ஆதரவிற்காக சிறப்பு நன்றியை தெரிவித்துக் கொள்கிறேன். அதேபோல், தினகரன் நாளிதழ் மற்றும் அதன் முதன்மை ஆசிரியர் நண்பர் திரு செந்தில் அவர்களுக்கும், வீரகேசரி நாளிதழுக்கும், தமிழ் வாசகர்களிடையே உச்சிமாநாட்டின் செய்தியை பரவலாக கொண்டு சென்றதற்காக என் பாராட்டுகளைத் தெரிவித்துக் கொள்கிறேன். மேலும், ஆங்கில மொழி ஊடகத் தளத்தில் யாழ்ப்பாண போஸ்ட் வழங்கிய மதிப்பு மிக்க ஆதரவு, இந்த உச்சிமாநாட்டை மேலும் பரந்த மற்றும் பல்வேறு வாசகர்களிடம் கொண்டு சேர்ப்பதில் முக்கிய பங்காற்றியது.

இந்த ஊடக கூட்டாளர்களின் ஒருங்கிணைந்த ஆதரவு இல்லாமல், வடக்கு முதலீட்டு உச்சிமாநாடு பெற்ற அளவிலான பொது விழிப்புணர்வை உருவாக்குவது சாத்தியமாக இருக்காது. பார்வையை வெளிச்சமாகவும், நோக்கத்தை தாக்கமாகவும் மாற்றியதில் இவர்களின் பங்கு அடிப்படையானதாகும்.

மொத்தத்தில், வடக்கு முதலீட்டு உச்சிமாநாடு உண்மையிலேயே ஒரு தனித்துவமான மாநாடாகத் திகழ்கிறது. இது உள்ளூர் மற்றும் சர்வதேச அளவில் பரந்த விழிப்புணர்வையும் நேர்மறையான ஈடுபாட்டையும் உருவாக்கியது. அதைவிட முக்கியமாக, உலகிற்கு ஒரு தெளிவான மற்றும் நம்பிக்கையான செய்தியை அனுப்பியது: வடக்கு மாகாணம் முதலீடுகளை வரவேற்கத் தயாராகவும், ஒழுங்கமைக்கப்பட்டதாகவும், திறந்ததாகவும் உள்ளது.



# மட்டக்களப்பில் ஆசிய அபிவிருத்தி வங்கியின் திட்டத்தின் கீழ் இரண்டாம் கட்டமாக நான்கு வீதிகளின் அபிவிருத்திப் பணிகள்

(கனகராசா சரவணன்)


மட்டக்களப்பில் ஆசிய அபிவிருத்தி வங்கியின் இரண்டாம் கட்ட வீதி அபிவிருத்தி திட்டத்தில் களுவங்கேணி, குறிஞ்சாமுனை, சின்ன உப்போடை, களுமுந்தன்வெளி ஆகிய பிரதேசங்களில் நான்கு வீதிகளின் அபிவிருத்திப் பணிகளை நாடாளுமன்ற உறுப்பினர் கந்தசாமி பிரபு, போக்குவரத்து, நெடுஞ்சாலைகள் மற்றும் நகர அபிவிருத்தி அமைச்சின் செயலாளர் பேராசிரியர் கபில பெரேரா ஆகியோர் நேற்று ஞாயிற்றுக்கிழமை ஆரம்பித்து வைத்தனர்.

இந்த வீதி அபிவிருத்தி திட்டத்தில் கல்லடி பாலத்துக்கு அருகிலுள்ள சின்ன உப்போடை வாவிக்கரை வீதியை 141.89 மில்லியன் ரூபா செலவில் புனரமைப்பதற்கான பணிகளை ஆரம்பித்து வைக்கும் நிகழ்வு தேசிய மக்கள் சக்தியின் மாநகர சபை உறுப்பினரும் பட்டிருப்பு தொகுதி அமைப்பாளருமான செல்லப்பெருமாள் வனிதா தலைமையில் இடம்பெற்றது.

இதில் பிரதம அதிதிகளாக நாடாளுமன்ற உறுப்பினரும் மட்டக்களப்பு மாவட்டத்தின் 14 பிரதேச செயலகங்களுக்குமான ஒருங்கிணைப்புக் குழுவின் தலைவருமான கந்தசாமி பிரபு, போக்குவரத்து, நெடுஞ்சாலைகள் மற்றும் நகர அபிவிருத்தி அமைச்சின் செயலாளர் பேராசிரியர் கபில பெரேரா ஆகியோரும், சிறப்பு அதிதிகளாக மட்டக்களப்பு மாநகர சபையின் முதல்வர் சிவம் பாக்கியநாதன், மாநகர சபையின் உறுப்பினர்களான முத்துலிங்கம் துதீஸ்வரன், திருமதி. செல்லப்பெருமாள் வனிதா, மொகமட் லத்தீப், செல்வி.தயாள குமார் கௌரி, மட்டக்களப்பு வர்த்தக சங்கத்தின் தலைவர் முத்துக்குமார் செல்வராசா, ஆசிய அபிவிருத்தி வங்கி அதிகாரிகள் ஆகியோரும் கலந்து கொண்டு சம்பிரதாய பூர்வமாக பெயர்ப்பலகையை திரை நீக்கம் செய்து அபிவிருத்திப் பணிகள் ஆரம்பித்து வைத்தனர்.










# கல்முனையில் பாடசாலை மாணவியைக் கர்ப்பமாக்கிய 45 வயதுச் சந்தேக நபர் 55 நாள்களின் பின் சிக்கினார்

(பாறுக் ஷிஹான்)

பாடசாலை மாணவி பாலியல் வல்லுறவிற்கு உள்ளாக்கப்பட்டு கர்ப்பமான சம்பவம் தொடர்பில் தலைமறைவாகி இருந்த சந்தேக நபர் 55 நாகளின் பின்னர் கல்முனை தலைமையகப் பொலிஸாரினால் கைது செய்யப்பட்டார்.

அம்பாறை மாவட்டம் கல்முனை கல்வி வலயத்திற்கு உட்பட்ட பாடசாலை ஒன்றில் கனிஷ்ட பிரிவில் கல்வி கற்று வந்த மாணவியே இச்சம்பவத்தில் பாதிக்கப்பட்ட நிலையில் கல்முனையில் உள்ள வைத்தியசாலையில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டுள்ள நிலையில் பெண் குழந்தை ஒன்றிற்குத் தாயாகியுள்ளார்.

இந்தச் சம்பவத்தில் பாதிக்கப்பட்ட மாணவியின் தந்தையார் கடந்த டிசெம்பர் முதலாம் திகதி மேற்கொண்ட முறைப்பாட்டிற்கமைய இச்சம்பவம் தொடர்பில் கல்முனை தலைமையக பெண்கள் சிறுவர் பிரிவு பொலிஸார் விரிவான விசாரணைகளை ஆரம்பித்திருந்தனர்.

பாடசாலைக்கு இரண்டு மாதங்களாகச் செல்லாத பாதிக்கப்பட்ட மாணவி குறித்து பாடசாலை நிர்வாகம் அம்மாணவியின் தாயாரை வினவியதாகவும், உரிய பதில் இன்மை காரணமாகவும் தாயார் கூறிய முரண்பாடான பதில்களில் சந்தேகம் காணப்பட்ட நிலையில் தற்போது மாணவியின் தந்தை இந்த விடயம் அறிந்து பொலிஸாரின் கவனத்திற்கு கொண்டு வந்திருந்தார்.

இந்தச் சம்பவத்திற்கு உடந்தையானவர் எனக் கருதப்படும் மாணவியின் தாயார் கைது செய்யப்பட்ட நிலையில் பிணையில் விடுதலை செய்யப்பட்டிருந்தார். அத்துடன்

மாணவியின் பெற்றோர் விவாகரத்து ஆகிய நிலையில் பிரிந்து வாழ்கின்றனர்.

இந்நிலையில் குடும்பத்தில் இரண்டாவது பிள்ளையான பாதிக்கபட்ட இந்த மாணவி அவரது தயாரின் தகாத தொடர்பில் இருந்த நபரினால் பாலியல் வல்லுறவிற்கு உட்பட்டுள்ளார் என்பது ஆரம்பக்கட்ட விசாரணையில் இருந்து தெரியவந்துள்ளது.

இச்சம்பவத்துடன் தொடர்பான 45 வயதுடைய 2 பிள்ளைகளின் தந்தையான பிரதான சந்தேக நபர் தலைமறைவாகி இருந்த நிலையில் 55 நாட்களின் பின்னர் கல்முனை பிராந்திய உதவி பொலிஸ் அத்தியட்சகர் எம்.கே.இப்னு அஸாரின் வழிகாட்டுதலில் கல்முனை தலைமையக பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி லசந்த களுவாராய்ச்சி தலைமையில் கல்முனை தலைமையக பெண்கள் சிறுவர் பிரிவு பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளார் எனத் தெரிகின்றது.







# 184 கிலோ ஹெராயின், 112 கிலோ ஐஸுடன் 11 சந்தேக நபர்கள் தெற்கு ஆழ்கடலில் கைது

(கற்பிட்டி நிருபர் சியாஜ்)

தெற்கு கடற்பரப்பில் 184 கிலோகிராம் ஹெராயின் மற்றும் 112 கிலோ ஐஸ் போதைப்பொருகளை ஏற்றிச் சென்ற பல நாள் மீன்பிடி படகுகள் இரண்டை 11 சந்தேக நபர்களுடன் கடற்படையினர் கைப்பற்றினர்.

இலங்கைப் பொலிஸ் மற்றும் கடற்படை இணைந்து, இலங்கையின் தெற்கே உள்ள ஆழ்கடலில் கடற்படையின் நீண்ட தூர கண்காணிப்புக் கப்பல்களைப் பயன்படுத்தி ஒரு கூட்டுத் தேடுதல் நடவடிக்கையை மேற்கொண்டனர்.

இதன் போது, ஐந்து சந்தேக நபர்களுடன், பல நாள் மீன்பிடிக் கப்பல் ஒன்று மடக்கப்பட்டது. அதே கடல் பகுதியில் நடத்தப்பட்ட கடற்படை நடவடிக்கைகளின் விளைவாக, போதைப் பொருள் மற்றும் தகவல் தொடர்பு உபகரணங்களை கொண்டு சென்றதாக சந்தேகிக்கப்படும் ஆறு சந்தேக நபர்களும், மற்றொரு பல நாள் மீன்பிடிக் கப்பலுடன் பிடிபட்டனர்.

கடற்படையினரால் கைப்பற்றப்பட்ட பல நாள் மீன்பிடி படகுகள், போதைப் பொருள் நிரப்பப்பட்ட சந்தேகத்திற்குரிய பதினான்கு படகுகள் சந்தேக நபர்களுடன் நேற்று ஞாயிற்றுக் கிழமை காலை திக்கோவிட்ட மீன்பிடித் துறைமுகத்திற்கு கொண்டு வரப்பட்டன.

மேலும் பொலிஸ் போதைப்பொருள் பணியகம் நடத்திய நிபுணர் பரிசோதனையில் பதினான்கு படகுகளில் சுமார் நூற்று என்பத்து நான்கு கிலோகிராமுக்கு மேற்பட்ட ஹெராயின் மற்றும் நூற்றுப் பன்னிரெண்டு கிலோ கிராமுக்கு மேற்பட்ட ஐஸ் போதைப்பொருள் இருப்பது உறுதி செய்யப்பட்டது.

இந்த நடவடிக்கையின் மூலம் கடற்படையால் கைப்பற்றப்பட்ட இரண்டு பல நாள் மீன்பிடி படகுகள், சுமார் நூற்று என்பத்து நான்கு கிலோகிராமுக்கு மேற்பட்ட ஹெராயின் மற்றும் நூற்று பன்னிரெண்டு கிலோ கிராமுக்கு மேற்பட்ட ஐஸ் போதைப்பொருள், மற்றும் தகவல் தொடர்பு உபகரணங்கள் ஆகியவை மேலதிக விசாரணை மற்றும் சட்ட நடவடிக்கைகளுக்காக சந்தேக நபர்களுடன் பொலிஸ் போதைப்பொருள் பணியகத்திடம் ஒப்படைக்கப்பட்டன.











# போதைப்பொருள் கடத்தல் விவகாரம்: கைது செய்யப்பட்ட 11 சந்தேக நபர்களையும் 7 நாள்கள் தடுத்து வைத்து விசாரிக்க அனுமதி





தென் கடற்பரப்பில் கைப்பற்றப்பட்ட இரண்டு போதைப்பொருள் படகுகளில் இருந்து கைது செய்யப்பட்ட 11 சந்தேக நபர்களையும், 7 நாள்கள் தடுத்து வைத்து விசாரணை செய்ய கொழும்பு புதுக்கடை நீதிவான் நீதிமன்றம் அனுமதி வழங்கியுள்ளது.


தெற்கு கடற்பரப்பில் கைப்பற்றப்பட்டு திக்கோவிட்ட துறைமுகத்திற்கு கொண்டு வரப்பட்ட 02 மீன்பிடி படகுகளில் இருந்து 296 கிலோ கிராமுக்கும் அதிக ஐஸ் மற்றும் ஹெரோயின் போதைப் பொருள்கள் மீட்கப்பட்டன .

இதன்போது பொலிஸ் போதைப் பொருள் ஒழிப்பு பணியகத்தினால் கைது செய்யப்பட்ட 11 சந்தேகநபர்களும் கொழும்பு – புதுக்கடை நீதவான் நீதிமன்றத்தில் முன்னிலைப்படுத்தப்பட்ட நிலையில், இந்த உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது.

இதேவேளை, எக்காரணத்திற்காகவும் எத்தகைய போதைப்பொருளையும் நாட்டிற்குள் கொண்டு வர முடியாதென பாதுகாப்பு பிரதியமைச்சர் அருண ஜயசேகர வலியுறுத்தியுள்ளார்.

போதைப்பொருள்களை நாட்டிற்குள் கொண்டுவராமல் தடுப்பதற்காக சுற்றி வளைப்பு நடவடிக்கையை தீவிரப்படுத்தியுள்ளதாக பிரதியமைச்சர் கூறினார்.

கடந்த ஆண்டிலேயே அதிக தொகை போதைப்பொருள் கைப்பற்றப்பட்டதாகவும் அவற்றின் பெறுமதி 1,000 கோடி ரூபாவிற்கும் அதிகமெனவும் பிரதியமைச்சர் அருண ஜயசேகர சுட்டிக்காட்டினார்.



# குற்ற விசாரணைப் பிரிவின் அதிகாரிகள் 6 பேர் கைது

கம்பஹா குற்ற விசாரணை பிரிவின் 06 அதிகாரிகள் கைது செய்யப்பட்டுள்ளனர்.

தாக்குதல் சம்பவம் தொடர்பில் கத்தோலிக்க அருட்தந்தையொருவர் மேற்கொண்ட முறைப்பாட்டிற்கமைய இந்த 06 அதிகாரிகளும் கைது செய்யப்பட்டனர் என பொலிஸ் ஊடகப் பேச்சாளர், உதவிப் பொலிஸ் அத்தியட்சகர் எஃப்.யூ.வூட்லர் தெரிவித்துள்ளார்.

கம்பஹா குற்ற விசாரணை பிரிவின் அதிகாரிகளால் நேற்று முன்தினம் கிரிந்திவிட்ட பகுதியில் இருந்து உடுகம்பொல பகுதியை நோக்கி பயணித்த மோட்டார் சைக்கிளொன்றை நிறுத்த கட்டளையிடப்பட்டுள்ளது.

அந்த சந்தர்ப்பத்தில் கட்டளையை மீறி பயணித்ததாகக் கூறப்படும் மோட்டார் சைக்கிளை பின்தொடர்ந்த அதிகாரிகள் அதனை நிறுத்தியுள்ளனர்.

இதன்போது அதில் இருந்த 33 வயதான மேற்படி அருட்தந்தையை கைது செய்ததன் பின்னர் இருதரப்பினருக்கு இடையே வாய்த்தர்க்கம் ஏற்பட்டுள்ளது.

இதன்போது பொலிஸ் அதிகாரிகள் தம்மை தாக்கினர் என கூறி குறித்த அருட்தந்தை நீர்கொழும்பு வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டார் என பொலிஸ் ஊடகப் பேச்சாளர் தெரிவித்துள்ளார்.

சம்பவம் தொடர்பில் முன்னெடுக்கப்பட்டுள்ள விசாரணைகளுக்கு அமைய சந்தேகத்தின் அடிப்படையில் கம்பஹா குற்ற விசாரணை பிரிவின் 06 அதிகாரிகள் கைது செய்யப்பட்டுள்ளனர்.

சம்பவம் தொடர்பான மேலதிக விசாரணைகள் உதவி பொலிஸ் அத்தியட்சகர் ஒருவரின் தலைமையில் முன்னெடுக்கப்பட்டுள்ளன.





இரவீந்திரன் மதுஷன்,
ஊடகக் கற்கைகள் துறை,
யாழ். பல்கலைக்கழகம்.

# வளம்தரும் நாட்டுக்கோழி வளர்ப்பு!

இலங்கையின் பொருளாதாரத்தில் கால்நடை உற்பத்தித்துறை பெருமளவு பங்குவகிக்கின்றது. ஆனால் டித்வா புயலால் பல்வேறு விவசாய உற்பத்திகள் அழிவடைந்ததுடன் கால்நடைகள் உற்பத்தியும் வீழ்ச்சி கண்டது. இதிலிருந்து மீண்டெழுவதற்கு முழு நாடும் முயற்சி செய்து வரும் இத் தருணத்தில் எமது நாடு வறுமைமிக்கது, செய்ய தொழில்கள் இல்லை என்று காரணங்களை சொல்லாது எம்மாலான மேற்கொள்ள உற்பத்திகளை மேற்கொண்டு நாடு பொருளாதார மீட்சியடைய உதவிட வேண்டும்.

அந்த வகையில் நாட்டுக்கோழி வளர்ப்பு என்பது எமக்கு புதிதான தொழில்துறையல்ல. கடந்த காலங்களில் ஒவ்வொரு வீட்டியும் பத்து கோழிகளையாவது வளர்த்து அதிலிருந்து முட்டை, இறைச்சி என்பவற்றை பெற்றுக்கொண்ட அனுபவம் எம் அனைவரிடமும் உண்டு. ஆயினும் வளந்து வரும் நவநாகரீக உலகில் தேவைகளும் விருப்பங்களும் வளர்சியடையவே எமது தற்சார்பு உற்பத்திகளை மறந்தவர்களாகிவிட்டோம். ஆயினும் தற்போதய சூழலில் தேவையான ஒன்றாகவும் அனைவராலும் மேற்கொள்ளக் கூடிய சுயதொழிலாக, வளம்தரும் நாட்டுக்கோழி வளர்ப்பு அமைந்துள்ளது.

### நாட்டுக்கோழி வளர்பின் அவசியம்

இறைச்சி மற்றும் முட்டை உற்பத்திக்காக தெரிவு செய்யப்பட்ட இனங்கள் பெரியளவிலான பண்ணைகளில் வளக்கப்பட்டாலும் வீடுகளில் வளர்க்கப்படும் நாட்டுக் கோழிகளே அதிக ஆரோக்கியம் மிக்கவையாகவும் தரமான உற்பத்திகளாகவும் காணப்படுகின்றன.

எமது வீடுகளில் மீதமாகும் உணவுக் கழிவுகள், சமையலறை கழிவுகளை கொண்டு நாட்டுக்கோழி வளப்பை இலதுவாக வீட்டிலே மேற்கொள்ள முடியும். குறைந்தளவு முதலீடு, இலகு பராமரிப்பு, சுவைமிக்க இறைச்சி மற்றும் அதிக விற்பனை விலை ஆகியவற்றால் இன்றைய இளம் சமூகம் அதிகளவு ஆர்வம் காட்டும் துறையாக கோழி வளர்ப்பு காணப்படுகின்றது. ஆயினும் ஆர்வத்துடன் தொழில் தொடங்கும் பலர் இடை நடுவே கோழி வளர்ப்பை கையிடுவற்கான காரணமாக, முறையற்ற திட்டமிடல் மற்றும் உரிய ஆலோசனைகளின்றி வளர்ப்பில் ஈடுபடுதல் ஆகியனை காணப்படுகின்றன.

எனவே முறையான திட்டமிடலுடன் உரிய ஆலோசனைகளைச் சேகரித்து ஆராய்ந்து அறிந்து நாட்டுக்கோழி வளர்ப்பில் ஈடுபடுவோமேயானால் வெற்றி கிடைப்பது உறுதி.

### நாட்டுக்கோழி வளர்ப்பின் அனுகூலங்கள்

குறைந்த முதலீடும் அதிக இலாபம் – பாரிய பண்ணை முறைகளைப் போன்று அதிக செலவு மிக்கஉட்கட்டமைப்புகள்நாட்டுக்கோழிவளர்ப்புக்கு அவசியமற்றவை. எமது வீட்டுச் சூழலில் கிடைக்கக்கூடிய பொருள்களைக் கொண்டே சிறிய அளவிலான கொட்டகைகளை அமைத்துக்கொள்ள முடியும். ஆரம்ப முதலீடு குறைவாக இருந்தாலும், சந்தையில் நாட்டுக்கோழி இறைச்சி மற்றும் முட்டைகளுக்குநிலவும்அதீததேவையால்குறுகிய காலத்தில் அதிக லாபத்தை ஈட்ட முடியும்.

இயற்கையான உணவுப் பழக்கம் – நாட்டுக்கோழிகள் பெரும்பாலும் மேய்ச்சல் முறையிலேயே வளர்க்கப்படுகின்றன. இவை வீட்டுத் தோட்டங்களில் காணப்படும் புழுக்கள், பூச்சிகள், கறையான்கள் மற்றும் களைச் செடிகளை உணவாக உட்கொள்வதால் தீவனச் செலவு பெருமளவு குறைகின்றது. மேலும், மேலே குறிப்பிட்டது போல சமையலறைக் கழிவுகள் மற்றும் எஞ்சிய உணவுகளை இவை உட்கொள்வதால், கழிவு முகாமைத்துவத்துக்கும் இது ஒரு சிறந்த தீர்வாக அமைகின்றது.

நோய் எதிர்ப்பு சக்தி மற்றும் குறைந்த பராமரிப்பு – ஏனைய கலப்பின கோழிகளுடன் ஒப்பிடுகையில், நாட்டுக்கோழிகள் எமது நாட்டின் தட்ப வெப்ப நிலைக்கு நன்கு பழக்கப்பட்டவை. இயற்கையிலேயே இவற்றுக்கு நோய் எதிர்ப்புச் சக்தி அதிகம் என்பதால், பராமரிப்புச் செலவுகளும் மருந்துச் செலவுகளும் மிகக் குறைவு. முறையான தடுப்பூசிகளை உரிய காலத்தில் வழங்குவதன் மூலம் இறப்பு வீதத்தைக் குறைத்து நிலையான வருமானத்தைப் பெறலாம்.

ஆரோக்கியமான மற்றும் சத்தான உணவு– இன்றைய இயந்திரமயமான உலகில் இரசாயனக் கலப்பற்ற உணவைத் தேடி மக்கள் அலைகின்றனர். நாட்டுக்கோழி முட்டைகள் மற்றும் இறைச்சி புரதச்சத்து மிக்கவை மட்டுமல்லாது, எவ்வித மருந்துகளும் இன்றி இயற்கையாக வளர்வதால் இவை மனித ஆரோக்கியத்துக்கு மிகவும் உகந்தவை. இதனால் சந்தையில் இவற்றுக்கு எப்போதும் தனித்துவமான மதிப்பும் உயர் விலையும் காணப்படுகின்றது.

பெண்களுக்கான சிறந்த சுயதொழில் வாய்ப்பு – இலங்கையின் கிராமியப் பொருளாதாரத்தில் பெண்களின் பங்களிப்பு முதன்மையானது. வீட்டின் ஏனைய பணிகளைச் செய்துகொண்டே, இல்லத்தரசிகள் மிக இலகுவாக மேற்கொள்ளக் கூடிய ஒரு பகுதிநேரத் தொழிலாக இது அமைகின்றது. இது குடும்பத்தின் நாளாந்த போசாக்குத் தேவையைப் பூர்த்தி செய்வதுடன், மேலதிக வருமானத்தை ஈட்டித் தரும் ஒரு வாழ்வாதாரமாகவும் விளங்குகின்றது.

சூழல் நேய விவசாயம் – கோழி வளர்ப்பின் மூலம் கிடைக்கும் எச்சங்கள் (எரு) வீட்டுத் தோட்டப் பயிர்களுக்குச் சிறந்த இயற்கை உரமாகப் பயன்படுகின்றன. இதுஇரசாயனஉரங்களுக்கான தேவையைக் குறைத்து, நஞ்சற்ற விவசாயத்தை ஊக்குவிக்கின்றது.

சூழல் பராமரிப்பு – கோழிகள் மன அழுத்தமின்றி வளர்ந்தால் மட்டுமே அவற்றின் முழுமையான உற்பத்தித் திறனைப் பெற முடியும் எனவே கோழி வளர்ப்பில் ஈடுபடும் ஒவ்வொருவரும்

தொடர்ச்சி▼





# வளம்தரும் நாட்டுக்கோழி வளர்ப்பு!

தொடர்ச்சி▲

அவற்றில் கவனம் செலுத்த வேண்டும்.

### கோழி வளர்க்கும் சூழல்

காற்றோட்டம் – கோழிக் கூடாரத்தினுள் அமோனியா வாயு தேங்குவதைத் தவிர்க்க தாராளமான காற்றோட்டம் அவசியம். இதற்காகக் கூரைக்கும் சுவருக்கும் இடையே போதிய இடைவெளி இருக்க வேண்டும்.

வெப்பநிலை மேலாண்மை – அதிக வெப்பம் கோழிகளைச் சோர்வடையச் செய்யும். கூரையின் மேல் தென்னோலைகளை இடுவதன் மூலம் அல்லது சுற்றிலும் நிழல் தரும் மரங்களை வளர்ப்பதன் மூலம் வெப்பத்தைக் குறைக்கலாம்.

வெளிச்சம் – முட்டை இடும் கோழிகளுக்கு ஒரு நாளைக்கு சுமார் 14-16 மணிநேர வெளிச்சம் தேவைப்படுகிறது. இது முட்டை உற்பத்தியைத் தூண்டும்.

உயிர்ப்பாதுகாப்பு – பண்ணைக்குள் நுழையும் இடத்தில் பாதக் கிருமிநாசினி வைத்திருத்தல் வேண்டும். அந்நிய நபர்கள் மற்றும் ஏனைய பறவைகள் உள்ளே வருவதைத் தடுத்தல் வேண்டும். எலிகள் மற்றும் ஏனைய ஊர்வனவற்றிலிருந்து பாதுகாப்பான முறையில் வேலி அமைத்தல்.

உணவு மேலாண்மை – நாட்டுக்கோழிகள் அனைத்துண்ணிகளாக இருந்தாலும், முறையான வளர்ச்சிக்குச் சமச்சீர் உணவு அவசியமானதாகும். அதனால் அதற்கேற்ற போசணைமிக்க உணவுகள் கிடைக்கப்பெறுகின்றதா என்பதிலும் உற்பத்தியாளர்கள் கவனம் செலுத்த வேண்டும்.

உணவின் வகைகள் – ஆரம்ப காலத் தீவனம் 0-8 வாரங்கள் வரை வழங்கப்பட வேண்டும். இதில் புரதச்சத்து அதிகமாக இருக்க வேண்டும். வளர்ச்சித் தீவனம் 9-20 வாரங்கள் வரை வழங்கப்படுகிறது. இது எலும்பு மற்றும் தசை வளர்ச்சிக்கு உதவும்.

முட்டைத் தீவனம் முட்டையிடத் தொடங்கிய பின் வழங்கப்பட வேண்டும். இதில் கல்சியம் சத்து அதிகமாக இருப்பது அவசியம்.

இயற்கை மற்றும் வீட்டுத் தீவனங்கள் – நாட்டுக்கோழி வளர்ப்பின் சிறப்பம்சமே தீவனச் செலவைக் குறைப்பதுதான். அதனால் எமது சூழலில் இலகுவாக கிடைக்கும் தீவனங்களை சேகரித்து பயன்படுத்த பழகிக்கொள்ள வேண்டும்.

சமையலறைக் கழிவுகள், காய்கறித் தோல், எஞ்சிய சோறு, அகத்தி, கீரை வகைகள், அசோலா மற்றும் முருங்கை இலைகள். தானியங்களான கம்பு, சோளம், நெல் மற்றும் உடைந்த அரிசி என்பவற்றை உணவாகப் போடலாம்.

நீர் மேலாண்மை – எப்போதும் சுத்தமான, குளிர்ந்த குடி தண்ணீர் கோழிகளுக்குக் கிடைப்பதை உறுதிப்படுத்த வேண்டும். நீரில் அவ்வப்போது விட்டமின்கள் அல்லது இயற்கை மருந்தான சீரகம், மஞ்சள் கலந்து வழங்குவது அவற்றின் செரிமானத்துக்கு உதவும்.

### கோழிகளின் வளர்ச்சியை பாதிக்கும் காரணிகள்

சூழல்மற்றும்உணவுசரியாகஅமையாவிட்டால் பின்வரும் சிக்கல்கள் ஏற்படலாம். அவற்றை அறிந்து வைத்திருப்பதுடன் அவற்றை நிவர்த்தி செய்யும் வழிவகைகளையும் அறிந்து வைத்திருப்பது வெற்றிகரமான கோழி வளர்ப்புக்கு உதவி புரியும்.

வளர்ச்சி குன்றுதல் – போதிய புரதச்சத்து இல்லாமை.

முட்டை உடைதல் – கால்சியம் சத்து குறைபாடு (இதற்கு கிளிஞ்சல் பொடி அல்லது சுண்ணாம்புச் சத்து வழங்கலாம்).

கொத்தின்னும் பழக்கம் – அதிக நெருக்கடி அல்லது போதிய இடமின்மை காரணமாக கோழிகள் ஒன்றையொன்று கொத்திக்கொள்ளும் பழக்கம் இருக்கும். அவற்றையும் அவதானிக்க வேண்டும்.

### தேசத்தின் மீட்சிக்கான தற்சார்புப் பயணம்

எந்தவொரு தொழிலும் கௌரவக் குறைவானது அல்ல. உழைத்து வாழும் ஒவ்வொரு தொழிலுமே உன்னதமானது. அந்த வகையில், நாட்டுக்கோழி வளர்ப்பு என்பது வெறும் கால்நடை வளர்ப்பு மட்டுமல்ல. அது ஒரு குடும்பத்தின் பொருளாதாரப் பாதுகாப்புக் கவசம். இதனை ஒரு பகுதி நேரத் தொழிலாக ஆண்கள், பெண்கள், இளைஞர்கள் என எவருமே தமது வீட்டுச் சூழலில் இருந்து கொண்டே மிக இலகுவாக முன்னெடுக்க முடியும். நவீன உலகில் நாம் இழந்த தற்சார்பு வாழ்வியலை மீண்டும் கையில் எடுக்க வேண்டிய தருணம் இதுவாகும்.

இலங்கையைப் பொறுத்தமட்டில், அண்மையில் ஏற்பட்ட டித்வா புயலின் கோரத்தாண்டவம் எமது விவசாய மற்றும் கால்நடைத்துறையில் பாரிய வடுக்களை ஏற்படுத்தியுள்ளது. இவ்வாறான இயற்கைச் சீற்றங்களால் ஏற்பட்ட வீழ்ச்சியிலிருந்து நாடு மீண்டெழ வேண்டுமாயின், நாம் பிறர் கையை எதிர்பார்ப்பதை விடுத்து, எம்மிடம் உள்ள வளங்களைக் கொண்டு உற்பத்தித் துறையில் இறங்க வேண்டும்.

'வறுமை" என்று வருந்துவதை விட, வீட்டுக்கு பத்து கோழிகளை வளர்ப்பதன் மூலம் குடும்பத்தின் போசாக்கையும் வருமானத்தையும் உறுதி செய்ய முடியும்.

ஒவ்வொரு வீட்டிலும் இவ்வாறான சிறிய அளவிலான உற்பத்திகள் பெருகும்போது, அது ஒட்டுமொத்த நாட்டின் பொருளாதார மீட்சிக்கு உந்துசக்தியாக அமையும். முறையான திட்டமிடல், உரிய ஆலோசனைகள் மற்றும் விடாமுயற்சியுடன் நாம் நாட்டுக்கோழி வளர்ப்பில் ஈடுபடுவோமானால், அது தனிமனித முன்னேற்றத்துக்கு மட்டுமன்றி, எமது தாய் நாட்டை மீண்டும் வளமான பாதையில் இட்டுச் செல்லவும் வழிவகுக்கும்.

"உயர்வு தரும் உழைப்பை நேசிப்போம் தற்சார்புப் பொருளாதாரத்தை நேசிப்போம்."

# ஈழத் தமிழர்களின் மேற்குலக குடிபெயர்வு ஏற்படுத்தும் மாற்றங்கள்!

குடிபெயர்வு என்பது தனியார் ஒருவரோ அல்லது குழுவோ தனது இருப்பிடத்தை நிரந்தரமாக மாற்றியமைப்பதை கருதுகின்றது. மக்கள் தான் வாழும் பிரதேசங்களில் இருந்து தள்ளுவிசை மற்றும் இழுவிசை காரணிகளின் விளைவால் குடிபெயர்க்கின்றனர்.

இலங்கைத் தமிழரின் மேற்குலக குடிபெயர்வானது, இலங்கையில் 1950 களின் பின்னர் ஏற்பட்ட அரசியல் பிரச்சினைகளுடன் ஆரம்பமாகியது. உள்நாட்டு அரசியல் பிரச்சினைகள், 1956 ஆம் ஆண்டு நிறைவேற்றப்பட்ட தனிச்சிங்களச் சட்டம், தொடர்ந்து இடம் பெற்ற 1958 சிங்கள தமிழ் இனக் கலவரம் மேலும் அரச நிர்வாகத்தில் தமிழர்கள் ஒதுக்கப்பட்ட தன்மை, பல்கலைக் கழக தரப்படுத்தல் திட்டம், பௌத்த மதத்துக்கு முதன்மை வழங்கியமை, 1949 ஈல் இந்திய வம்சாவளி தமிழ் மக்களின் குடியுரிமை பறிப்பு, வடக்கு கிழக்குத் திட்டமிட்ட புறக்கணிப்பு, நிலத் துண்டாடல்கள் சிங்கள குடியேற்றங்கள் போன்ற பல்வேறுகாரணங்களைஅடிப்படையாகக்கொண்டு இந்தக் குடிப்பெயர்வானது இடம்பெற்றது.

ஆட்சியில் இருந்தவர்கள் தமக்கு சார்பான கொள்கைகளை பின்பற்றி ஏனைய சிறுபான்மை இனங்களைப் புறக்கணித்தமையாலும் பாதிக்கப்பட்ட புத்திஜீவிகள் மேற்குலக நாடுகளான இங்கிலாந்து, ஆஸ்திரேலியா, ஐக்கிய அமெரிக்கா,நோர்வே, சுவீடன்,கனடா, பிரான்ஸ் , பிரித்தானியா, நெதர்லாந்து, சுவிட்சர்லாந்து போன்ற நாடுகளுக்கு குடிபெயரச் செய்தனர். 1980 ஆம் ஆண்டுகளின் பின்னர் அதிகமான தமிழர்கள் இலங்கை நாட்டை விட்டு மேற்குலக நாடுகளுக்கு இடம்பெயர்ந்துள்ளமையை புள்ளி விவரங்கள் காட்டுகின்றன.

இவ்வாறு மேற்கு நாடுகளுக்குக் குடிப்பெயர்ந்தவர்கள்முக்கியமாகஅரசியல்காரணிகளைவைத்தே குடிபெயர்ந்தவர்களாக காணப்பட்டாலும் அவ்வாறு குடி பெயர்ந்த நாடுகளின் மொழி பற்றியோ அவர்களது கலாசாரம் பற்றியோ பெரிதும் கவலைப்படாதவர்களாகவும் தொழில் வாய்ப்பு கிடைப்பதையும் இருப்பிட வாய்ப்புகளையும் அதிகம் எதிர்பார்த்தவர்களாக காணப்பட்டனர்.

அதேவேளை தமது வருமானத்தின் பெரும் பகுதியைத் தமது சொந்த நாட்டுக்கு அனுப்புவதையும், இலங்கை உள்நாட்டு அரசியல் நிலைமையைக் காரணம் காட்டி தம் குடியேறிய நாட்டில் நிரந்தரமாக குடியேறுவதையும் நோக்கமாகக் கொண்டிருந்தனர். இதனால் இது குறுகியகாலத்தை மையமாகக் கொண்டதாக காணப்படவில்லை. தான் குடிபெயர்ந்த நாடுகளில் நிரந்தரமாகத் தங்கி சொந்தமாக வாழ்விடங்களை அமைக்கும் நிலையையும் சில சந்தர்ப்பங்களில் மேலும் வசதி வாய்ப்புகளை அளிக்கும் நாடுகளை நோக்கிக் குடிபெயர்ந்து செல்லும் தன்மையையும் அவதானிக்க முடிகின்றது. முக்கியமாக பிரான்ஸ், ஜேர்மனி, சுவிட்சர்லாந்து போன்ற மேற்குலக நாடுகளில் இருந்து கனடாவுக்கு இடம் பெயர்ந்து செல்லும் தன்மையை காணலாம். ஆங்கில மொழி பேசும் நாடு என்பது மட்டுமல்லாது குடிப்பெயர்வுக்கு அதிக வாய்ப்பு வசதிகளை வழங்கும் நாடு என்பதும் இதற்கு அடிப்படைக் காரணமாக அமைந்தது.

மேற்குலக குடிபெயர்வை மேற்கொண்டவர்கள் மேற்குலக கலாசாரத்துக்கு ஏற்ப தாமும் இசைவாக்கமடைந்து வருவதுடன் தம் பிள்ளைகளையும் அவற்றைக் கேட்டும் பயிற்றுவித்தும் அந்த நாட்டுக்கு ஏற்ப இசைவாக்கமடையச் செய்து வருவதையும் காணமுடிகின்றது. அத்தோடு குடிபெயர்ந்த நாடுகளின் கொள்கைகளைப் பின்பற்றுவதுடன் தேசிய அடையாளங்களையும் ஒருங்கிணைத்து செல்வத்தையும் அவதானிக்கலாம்.

அதேவேளை, மேற்குலகத்துக்குக் குடிபெயர்ந்து சென்ற தமிழ் மக்கள் மீளவும் தங்களினுடைய சொந்த நாட்டுக்குத் திரும்புவதற்கு உரிய ஏதுநிலை அல்லது விருப்பம் அற்றவர்களாகவும் தங்கள் வாழ்க்கை வசதிகளை மேலும் அந்த நாடுகளில் பெருக்கிக் கொள்பவர்களாகவும் நிரந்தரமாகக் குடியேறித் தமது உழைப்பின் பெரும் பகுதியை நிலையான முதலீடுகளுக்காகவும் தனது வாழ்க்கையின் மேம்பாட்டுக்காகவும் செலவு செய்பவர்களாகவும் காணப்படுகின்றனர்.

மேற்குலக குடி பெயர்வுகள் இரண்டு விதமான தன்மையைக் கொண்டுள்ளதை அவதானிக்கக் கூடியதாக உள்ளது. முதலாவது அரசியல் ரீதியான காரணங்களை வைத்து மேற்குலக நாடுகளில் அகதி அந்தஸ்து கோரி அடைக்கலம் கோருவது, இரண்டாவது வகை சிலர் பொருளாதார நோக்கங்களை மையமாகக் கொண்டு தாமும் அரசியல் ரீதியாக பாதிக்கப்பட்டவர்கள் எனும் பொய்க் காரணத்தை கூறி அந்த நாடுகளில் வாழ்க்கை அமைத்துக் கொண்டதையும் அவதானிக்கலாம்.

முக்கியமாக மேற்குலகத்துக்கான ஈழத் தமிழர்களுடைய குடி பெயர்வானது தமிழீழ விடுதலைப் போராட்டத்துக்கு ஒரு சர்வதேச பரிணாமத்தைக் கொடுத்தது என்பதற்கு மாற்று கருத்து இல்லை. இலங்கை அரசினுடைய வன்முறை மற்றும் தமிழின விரோதச் செயற்பாடுகளால் பாதிக்கப்பட்டு வெளியேறிய இளைஞர்கள், இலங்கையில் தனிநாடு ஒன்றை அமைப்பதற்கான முயற்சிகளையும் அத்துடன் இலங்கை அரசின் விரோத செயல்களை வெளிநாடுகளுக்கு எடுத்துக்காட்டும் செயல்களிலும் ஈடுபட்டு வருகின்றனர். அத்துடன் ஆர்ப்பாட்டங்கள், ஊர்வலங்கள் மற்றும் ஒளிபரப்பு, ஒலிபரப்பு ஊடகங்கள் மேற்கொண்டமையும் காணலாம்.

அதுமட்டுமல்லாது சர்வதேச மன்னிப்பு சபை, ஐக்கிய நாடுகள் சபை வரைக்கும் இலங்கை அரசினுடைய தமிழர் விரோத செயற்பாடுகளை கொண்டு சென்றனர். முக்கியமாகப் புலம்பெயர்ந்த தமிழர்கள் நாடு கடந்த அரசியல் வாயிலாகவும் செயல்பட்டனர். குறிப்பாக தமிழின எதிர்ப்பு நடவடிக்கைகளை சர்வதேச மையப்படுத்துவதுடன் தமிழீழ கோரிக்கைக்கு ஆதரவான தன்மையிலும் பெருமளவிலான நிதிப் பங்களிப்பையும் மேற்கொண்டனர்.

இலங்கை அரசு செய்துவரும் மனித உரிமை மீறல்கள், அடக்குமுறைகள், இனச் சுத்திகரிப்பு, பாராபட்சமான ஒழுங்கு முறைகள் போன்ற அநீதிகளை எடுத்துக்காட்டி இலங்கை அரசுக்கு உதவி செய்யும் நாடுகளுக்கு இதனை எடுத்துச் செல்வதற்கும் அவர்கள் தவறவில்லை.

மேற்குலக குடிபெயர்வானது ஈழத்தமிழர்களுடைய சமூக மாற்றத்தினை ஏற்படுத்தியதாவது தொழில்முறைமை சாதி அமைப்பு போன்ற கட்டமைப்புகளில் மாற்றங்களை ஏற்படுத்தியது எனலாம். குறிப்பாகப் பாரம்பரிய தொழில்கள் இதனால்கைவிடப்பட்டுபுதியசமூகஅந்தஸ்துக்கள்உருவாகியது. இதனால் படித்த சமூகம் உருவாகியது டன் நாகரீக தன்மை கொண்ட சமூகங்களாக

தொடர்ச்சி▼

# ஈழத் தமிழர்களின் மேற்குலக குடிபெயர்வு ஏற்படுத்தும் மாற்றங்கள்!

தொடர்ச்சி▲

பெருமளவானசமூகங்கள்உருவாக்கம்பெற்றது. இக் குடி பெயர்வானது ஒரு குறிப்பிட்ட சமூக அந்தஸ்து அல்லது வர்க்க பிரிவில் மட்டும் மாட்டுப்படுத்தாது தமிழர்களின் அனைத்து சமூக பிரிவினரின் வாழ்க்கை முறையிலும் மேம்பாட்டை ஏற்படுத்தியது என்று கூற முடியும். இவர்களது தாயக பிரதேசங்களில் கல்வி நிலையங்கள், ஆலயங்கள், வைத்தியசாலைகள், சன சமூகநிலையங்கள், போக்குவரத்து வசதிகளை ஏற்படுத்திக் கொடுத்தும் கலாசார மண்டபங்களை கட்டுவித்தும் கோயில்களை கட்டியும் புணருத்தாருணம் செய்தும் தமிழ் மக்களின் மேம்பாட்டுக்கு இவர்களது பொருளாதார உதவியானது பேருதவியாக விளங்கியது.

மேற்குலகத்துக்குக் குடி பெயர்ந்த இலங்கை தமிழர்கள் அந்த நாடுகளில் சொல்லக்கூடிய வகையில் வர்த்தக நடவடிக்கைகளில் ஈடுபட்டும் சாதனை படைத்திருக்கின்றார்கள். இந்த நாடுகள் அனைத்திலும் வர்த்தக சங்கங்களை அமைத்து வர்த்தக நடவடிக்கைகளில் வெற்றி பெற்றனர். அத்துடன் அவர்களைக் கௌரவித்தும் பாராட்டு விழாக்கள் நடத்தியும் கௌரவித்தார்கள். அத்துடன் பிரபல வர்த்தக நிலையங்களை அமைத்தும் பொருளாதார பேறு உள்ளவர்களாகவும் மாறி வருகின்றனர்.

இவர்கள்தான் குடியேறிய நாடுகளில் ஒளிபரப்பு மற்றும் தொலைக்காட்சி வானொலி நிகழ்வுகளையும் நடத்தி வருகின்றனர். பத்திரிகைத்துறை சஞ்சிகைகள் கையேடுகள் என்பவற்றையும் காலத்துக்குக் காலம் வெளியிட்டு வருவதையும் அவதானிக்கலாம். அத்துடன், தான் குடியேறிய நாடுகளில் தமது கலாசார அடையாளங்களை நிலைநிறுத்தும் வகையிலும் பல நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகின்றனர். அந்த வகையில் கலாசார நிகழ்வுகளை நடத்தி வருவதுடன் தமிழ்மொழி மீதான பற்றைத் தம் பிள்ளைகளுக்கு ஏற்படுத்துவதுடன் தமிழ் பாடசாலைகளை நடத்துதல், இந்து கோயில்களை அமைத்து பாரம்பரிய கலைகளை வளர்த்தல், நாட்டிய பள்ளிகளை உருவாக்கல், சாஸ்திரிய இசையை பயிற்றுவித்தல் போன்றவற்றையும் குறிப்பிட முடியும். மேலும் தாம்வாழும் நாடுகளில் தமிழர் பண்டிகைகளையும் சடங்கு சம்பிரதாயங்களையும் கடைப்பிடிப்பதை காணலாம்.

நம் நாட்டுக்கு உரித்தான உணவு பழக்கவழக்கங்களையும் கை கொள்வதை காணலாம். இவற்றின் ஊடாக தமது பண்பாடுகளை வெளிப்படுத்துவதையும் அவதானிக்கலாம்.

ஆனாலும் சில இளைய சமூகத்தினர் இதை அறிந்து கொள்ளாதவர்களாகவும் தமிழ் மொழியை அறியாதவர்களாகவும் வாழ்கின்றார்கள். சிலர் வீடுகளில் தமிழ் மொழியும் வெளியிடங்களில் தமது குடியேறிய நாட்டின் மொழியையும் பின்பற்றுவார்களாகவும் காணப்படுகின்றனர். பிறவசதிகளுக்காகவும் அந்தந்த நாட்டு மொழியைக் கற்று அந்தந்த நாட்டு அடையாளத்தில் தம்மை தொலைத்தவர்களாகவும் தமது பண்பாட்டு அடையாளம் இல்லாதவர்களாகவும் காணப்படுகின்றனர்.

முக்கியமாக இந்தத் தமிழர்கள் மத்தியில் அதிகமான பணம் மேற்குலக நாடுகளிலிருந்து வருவதால், மக்கள் மத்தியில் கஷ்டப்பட்டு உழைத்து உண்ணும் பழக்கம் நலிவடைந்து வருவதுடன் சுகபோக வாழ்வால் வீணான சமூக விரோதங்களும் தேவைக்கு அப்பாட்பட்ட ஆடம்பர வாழ்வும் எல்லா சமூக மட்டத்திலும் இடம் பெறுவதையும் அவதானிக்கலாம். சமய ரீதியான சடங்குகளில் இருந்து வாழ்வியலில் இடம்பெறுகின்ற சடங்கு வரைக்கும் புதிய பரிணாமங்களும் மாற்றங்களும் புதிய உள்வரவு முறைகளும் குடிபெயர்ந்த ஈழத் தமிழர்களின் பண வரவாலும் அவர்களின் நாகரிகத்தின் வெளிப்பட்டாலும் இங்கு வாழுபவர்கள் வாழ்வு நிலையில் புதிய பரிணாமத்தை வழங்கியிருப்பதைக் அவதானிக்கலாம்.

திருமண நிகழ்வு தொடங்கி இறுதிச் சடங்கு வரையும் பல பண்பாட்டு மாற்றங்கள் நிகழ்ந்து கொண்டிருப்பதைக் காணலாம். திருமணத்துக்காக சீதனம் கொடுத்தல் இன்று குடும்ப அந்தஸ்தை எடுத்துக்காட்டும் நிகழ்வாகப் புலம்பெயர் சமூகத்தின் பணம் யாழ்ப்பாணத்தில் கரை புரண்டு ஓடுவதைக் குறிப்பிடலாம். திருமணத்துக்கான சடங்குகள் கூட பாரம்பரியங்களை கைவிட்ட நிலையில் கேளிக்கை நிகழ்வாக நடைபெறுவதை காணலாம். இதனால் தமிழர் சமூகத்தில் மண விலக்குகள் அதிகம் ஏற்படுவதையும் அவதானிக்கலாம். மனிதனின் அத்தியாவசிய தேவைகளில் ஒன்றான உறைவிடத் தேவை இன்று ஆடம்பரமான நிலையில் பாரம்பரிய வீடமைப்பு முறைகள் கைவிடப்பட்டு மாடி வீடுகளும் அடுக்குமாடி குடியிருப்புகளும் ஆடம்பரமான பசுமை கொண்ட வீடுகளும் உருவாக்கப்படுகின்றன. இவ்வாறு உருவாக்கப்படுவதற்கு புலம்பெயர் தமிழர்களினுடைய பணமானது ஒரு வகையில் காரணமாக அமைகின்றது. இவ்வாறாக சமூகத்தில் பல மாற்றங்கள் ஏற்படுவதற்கு தமிழர்களின் குடி பெயர்வானது காரணமாக அமைந்திருக்கின்றது.

பொருளாதார நோக்கு நிலையில் பார்க்கின்ற போது விவசாய நிலையானது பெருமளவில் கைவிடப்பட்ட நிலையில் உள்ளதுடன். மீன்பிடி தொழில் சிறிதளவில் மேற்கொள்ளப்பட்டு வருகின்றது. அத்துடன் வியாபாரம் நடவடிக்கைகள் பாரியளவு இடம் பெறுவதை காணலாம். புலம்பெயர் பண வரவால் புலம்பெயர்ந்த பிள்ளைகள், தங்கள் பெற்றோர், தங்கள் சந்ததியினர் சாதிப்பெயரால் அமைந்த தமது தொழில்கள் செய்ய விரும்பாத நிலையில் செயற்படுகின்றர்.

அரசியல் காரணங்களை மையமாக வைத்து மேற்குலகு நோக்கிக் குடிபெயர்ந்த ஈழத் தமிழர்களினுடைய குடிப்பெயர்வானது தமிழர்கள் மத்தியில் பல சாதகமான விளைவுகளை ஏற்படுத்த இருந்தாலும் அண்மை காலத்தில் அவர்களின் பணவரவு காரணமாக இலங்கை தமிழர்கள் மத்தியில் சில வன்முறை சம்பவங்களும் அமைதியின்மையும் சில ஆடம்பரமான நிகழ்வுகளும் கேளிக்கை நிகழ்வுகளும் இடம் பெறுவதையும் காணலாம். எவ்வாறாயினும் இந்த புலப்பெயர்வால் ஈழத் தமிழர்களுக்கு சாதகமான ஒரு பொருளாதார நிலமை இருந்து வருகின்றது என்று சொல்லலாம்.



இரா.வர்ணன்,
ஊடக கற்கைகள் துறை,
யாழ். பல்கலைக்கழகம்.



# இரத்ததானச் சங்கத்தின் ஏற்பாட்டில் 35 பேர் குருதிக் கொடை வழங்கினர்

















வல்வெட்டித்துறை இரத்ததானச் சங்கத்தின் ஏற்பாடில் நேற்று ஞாயிற்றுக்கிழமை காலை 8.30 மணிமுதல் மாலை 2.15 வரை இடம்பெற்ற இரத்த தான முகாமில் 35 பேர் குருதிக் கொடை வழங்கியுள்ளனர்.

பருத்தித்துறை இரத்த வங்கியில் ஏற்பட்டுள்ள குருதித் தட்டுப்பாட்டை நிவர்த்தி செய்யும் வகையில், இந்த குருதிக் கொடை முகாம் ஏற்பாடு செய்யப்பட்டது. இதில் பங்கேற்று குருதிக் கொடை வழங்கியவர்களுக்கு கற்றல் உபகரணங்கள் அன்பளிப்பாக வழங்கப்பட்டதுடன், அவர்களில் ஒருவர் குலுக்கல் முறையில் தெரிவு செய்யப்பட்டு வெள்ளிப்பதக்கம் அணிவித்து கௌரவிக்கப்பட்டார்.

வல்வெட்டித்துறை இரத்ததான சங்க தலைவர் வீர சுரேந்திரனின் ஏற்பாட்டில் ஒழுங்குபடுத்தப்பட்ட இந்த இரத்ததான முகாமில், பருத்தித்துறை இரத்த வங்கியினரது பங்கேற்பில் குருதி சேகரிப்பு இடம்பெற்றிருந்தமை குறிப்பிடத்தக்கது.

# புதிய அரசமைப்பை உருவாக்கும் பணியில் அரசு ஆரம்ப நடவடிக்கையை எடுக்கவில்லை

## அஜித் பி பெரேரா தெரிவிப்பு




நிறைவேற்று அதிகாரமிக்க ஜனாதிபதி முறைமையை இரத்துச் செய்வதற்கும், புதிய அரசமைப்பை உருவாக்குவதற்கும் அரசாங்கம் எவ்வித ஆரம்பக்கட்ட நடவடிக்கைகளையும் முன்னெடுக்கவில்லை என ஐக்கிய மக்கள் சக்தியின் களுத்துறை மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் அஜித் பி பெரேரா தெரிவித்துள்ளார்.

புதிய அரசமைப்பு உருவாக்கம் தொடர்பில் கருத்து தெரிவிக்கும்போதே அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார். அவர் மேலும் தெரிவிக்கையில்,

"புதிய அரசமைப்பு உருவாக்கத்துக்காக நல்லாட்சி அரசாங்கம் முன்னெடுத்த நடவடிக்கைகளை விரைவுப்படுத்தி ஆட்சிக்கு வந்தவுடன் புதிய யாப்பினை உருவாக்குவதாக தேசிய மக்கள் சக்தி நாட்டு மக்களுக்கு வாக்குறுதி வழங்கியது.

ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்க ஆட்சிக்கு வந்து ஒரு வருடம் நிறைவடைந்துள்ளது. ஆனால் புதிய அரசமைப்பு உருவாக்கம் பற்றியோ அல்லது நிறைவேற்று அதிகாரமிக்க ஜனாதிபதி முறைமை நீக்கம் பற்றியோ நாடாளுமன்றத்திலோ அல்லது பொது இடங்களிலோ ஏதம் குறிப்பிடவில்லை.

நிறைவேற்று அதிகாரமிக்க ஜனாதிபதி பதவியின் மோகத்துக்கு ஜனாதிபதியும் அடிபணிந்து விட்டார் என்றே தோன்றுகிறது. கடந்த காலங்களில் நிறைவேற்று அதிகாரமிக்க ஜனாதிபதி முறைமை நாட்டுக்கு சாபம், வெஷ்மினிஸ்டர் முறைமையிலான நாடாளுமன்ற ஆட்சி முறைமை சிறந்தது என்று நாடாபாராளுமன்றத்தில் உரையாற்றினார். ஆனால் தற்போது நிறைவேற்று அதிகாரமிக்க ஜனாதிபதி முறைமை நீக்கத்தில் மௌனம் காக்கிறார்.

புதிய அரசமைப்பு உருவாக்கப்பட வேண்டும், மாகாணசபை முறைமை பலப்படுத்தப்பட வேண்டும். புதிய யாப்புருவாக்கம் தொடர்பில் எண்ணக்கரு பத்திரம் சமர்ப்பிக்கப்படும் என்று பிரதமர் நாடாளுமன்றத்துக்கு அறிவித்தார், எவ்வித ஆரம்பக்கட்ட நடவடிக்கைகளும் எடுக்காத காரணத்தால் மூன்று மாதங்களுக்கு பின்னரும் அதே கேள்வியை கேட்டேன் அதற்கும் " எண்ணக்கரு பத்திரம் அமைச்சரவைக்கு சமர்ப்பிக்கப்படும்" என்றே பதிலளித்தார்.

புதிய அரசமைப்பு உருவாக்கம் தொடர்பில் எண்ணக்கரு பத்திரம் சமர்ப்பிப்பு என்பது வெறும் அறிவிப்பாகவே காணப்படுகிறது. புதிய அரசியலமைப்பு உருவாக்கத்துக்குரிய ஆரம்பக்கட்ட எவ்வித நடவடிக்கைகளையும் அரசாங்கம் இதுவரையில் எடுக்கவில்லை.

நாட்டில் நடைமுறையில் காணப்படும் அடிப்படை பிரச்சினைகளுக்கு தீர்வு காணபதற்காக ஒட்டுமொத்த மக்களின் அபிலாசைகளையும் கோரி புதிய யாப்பினை உருவாக்குவதற்குரிய நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும்.ஓரிரு மாதங்களில் அரசமைப்பை உருவாக்க முடியாது.

அரசமைப்பு உருவாக்கம் தொடர்பில் வெளிப்படையான பேச்சுவார்த்தைகளை அரசாங்கம் மேற்கொள்ள வேண்டும். நடைமுறையில் உள்ள அரசமைப்பில் பல குறைப்பாடுகளில் காணப்படுகிறது. ஆகவே புதிய யாப்பினை உருவாக்கும் செயற்பாடுகளை அரசாங்கம் வெளிப்படையாக முன்னெடுக்க வேண்டும். பத்தரமுல்ல கட்சி காரியாலயத்தில் இருந்துக் கொண்டு யாப்புருவாக்க பணிகளை முன்னெடுக்க முடியாது."– என்றார்.

# சிறு, நடுத்தர நிறுவனங்களின் வளர்ச்சிக்காக 166 மில்லியன் டொலர்கள் முதலீட்டுத் திட்டம்

IFC International Finance Corporation WORLD BANK GROUP

பெண் தொழில் முனைவோர்களால் முன்னெடுக்கப்படும் வணிக மற்றும் விவசாய துறையை வலுப்படுத்துவதை நோக்கமாகக் கொண்டு, சிறு மற்றும் நடுத்தர நிறுவனங்களுக்கான நிதி அணுகலை விரிவுபடுத்துவதற்காக 166 மில்லியன் அமெரிக்க டொலர் முதலீட்டுத் திட்டத்தை சர்வதேச நிதி நிறுவனம் அறிவித்துள்ளது.

சிறு மற்றும் நடுத்தர நிறுவனங்களுக்குத் தேவையான நிதி உதவிகளை எளிதாகக் கிடைக்கச் செய்வதே இந்த திட்டத்தின் முக்கிய நோக்கமாகும் என தெரிவிக்கப்படுகிறது.



# டிட்வா சூறாவளி காரணமாக ஏற்பட்ட உயிரிழப்பு எண்ணிக்கை அதிகரிப்பு

டிட்வா சூறாவளியால் ஏற்பட்ட உயிரிழப்புகளில் மேலும் 03 பேரின் மரணங்கள் உறுதி செய்யப்பட்டுள்ளன என தேசிய அனர்த்த முகாமைத்துவ நிலையம் அறிவித்துள்ளது.

நேற்று முற்பகல் 10 மணிக்கு இற்றைப்படுத்தப்பட்ட தரவுகளின் அடிப்படையில் இந்த விடயம் அறிவிக்கப்பட்டுள்ளது.

மாவட்ட அரசாங்க அதிபர்களினால் உறுதி செய்யப்பட்ட தரவுகளுக்கு அமைய, கண்டி, வவுனியா மற்றும் இரத்தினபுரி ஆகிய மாவட்டங்களில் தலா ஒவ்வொரு மரணங்கள் உறுதி செய்யப்பட்டுள்ளதாக, புதுப்பிக்கப்பட்டுள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அதற்கமைய, டிட்வா சூறாவளியால் ஏற்பட்ட அனர்த்தங்களில் சிக்குண்டு உயிரிழந்தவர்களின் எண்ணிக்கை 649 ஆக அதிகரித்துள்ளது.

இந்த நிலையில் 173 பேர் காணாமல் போயுள்ளனர் என அறிவிக்கப்பட்டுள்ளது.

இதேவேளை, சூறாவளியால் பாதிக்கப்பட்டவர்களில் 2,199 குடும்பங்களைச் சேர்ந்த 6,680 பேர் தொடர்ந்தும் 85 தற்காலிக பாதுகாப்பு முகாம்களில் தங்கவைக்கப்பட்டுள்ளனர்.

அத்துடன், 48,350 குடும்பங்களைச் சேர்ந்த 165,884 பேர் உறவினர்கள் மற்றும் நண்பர்களின் வீடுகளில் தங்கியுள்ளனர் என தேசிய அனர்த்த முகாமைத்துவ நிலையம் அறிவித்துள்ளது.

# செவ்வந்தியை மேலும் 90 நாள்கள் தடுத்து வைத்து விசாரிக்க உத்தரவு

திட்டமிட்ட குற்றக்கும்பல் உறுப்பினர் கணேமுல்ல சஞ்சீவ படுகொலை செய்யப்படுவதற்கு உடந்தையாக இருந்ததாகக் குற்றம் சாட்டப்பட்டு, தடுப்புக் காவலில் வைக்கப்பட்டுள்ள இஷாரா செவ்வந்தி என்ற சந்தேகநபரை மேலும் 90 நாள்கள் தடுப்பு காவலில் வைத்து விசாரணை நடத்த நீதிமன்றம் அனுமதி வழங்கியுள்ளது.

கொழும்பு பிரதான நீதவான் அஸங்க எஸ்.போதரகம் முன்னிலையில் அண்மையில் இந்த வழக்கு விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது.

இதன்போது, சந்தேகநபரான இஷாரா செவ்வந்திக்கு எதிராக ஏற்கனவே வழங்கப்பட்டிருந்த 90 நாள்களுக்கான தடுப்புக்காவல் உத்தரவு ஜனவரி 15ஆம் திகதியுடன் நிறைவடைந்ததாக கொழும்பு குற்றத்தடுப்புப் பிரிவினர் சுட்டிக்காட்டினர்.

இதனையடுத்து, மேலதிக விசாரணைகளுக்காக அவரை மேலும் 90 நாள்கள் தடுப்பு காவலில் வைக்க நீதவான் அனுமதி அளித்தார்.

அத்துடன், இந்தக் கொலைச் சம்பவத்துடன் தொடர்புடைய எட்டு சந்தேக நபர்கள் வெளிநாடுகளுக்குத் தப்பிச் சென்றுள்ளனர் என பொலிஸார் நீதிமன்றத்தில் தெரிவித்தனர்.



அவர்களைக் கைது செய்வதற்காகச் சர்வதேச பொலிஸ்க்கு "சிவப்பு அறிவித்தல்" பிறப்பிப்பதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருவதாகக் குறிப்பிடப்பட்டது.

குறிப்பாக, சம்பத் அஷேன், ஷான் அரோஷ் (மத்துகம ஷான்), படுவத்தே சாமர மற்றும் டுபாய் சுத்தா ஆகிய சந்தேகநபர்களுக்கு எதிராக ஆங்கில மொழியில் சிவப்பு அறிவித்தல் பிறப்பிக்கப்படவுள்ளது.

இந்த வழக்கு விசாரணைக்கு வந்த போது, நான்கு சந்தேகநபர்கள் நேரடியாக நீதிமன்றத்தில் முன்னிலைப்படுத்தப்பட்டனர்.

ஏனைய சந்தேகநபர்கள் 'ஸூம்' தொழில்நுட்பம் ஊடாக முன்னிலைப் படுத்தப்பட்டனர்.

இதனைத் தொடர்ந்து, இந்தச் சம்பவத்துடன் தொடர்புடைய ஏனைய சந்தேகநபர்களை எதிர்வரும் பெப்ரவரி 6ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்க நீதிமன்றம் உத்தரவிட்டது.



# ஐக்கிய அரபு இராச்சியத்தில் இருந்து வரும் சுற்றுலாப் பயணிகளை அதிகரிக்கத் திட்டம்

ஐக்கிய அரபு இராச்சியத்தில் இருந்து இலங்கைக்கு வரும் சுற்றுலாப் பயணிகளின் எண்ணிக்கையை, இந்த ஆண்டு இரண்டு மடங்காக அதிகரிப்பதற்கு அரசாங்கம் திட்டமிட்டுள்ளது.

இலங்கையின் சுற்றுலாத்துறையை உலகத்தரம் வாய்ந்த நிலைக்கு உயர்த்தும் நோக்கில், இந்த தீர்மானம் எட்டப்பட்டுள்ளது.

கடந்த 2025 ஆம் ஆண்டு, ஐக்கிய அரபு இராச்சியத்தில் இருந்து 20,000 சுற்றுலாப் பயணிகள் வருகை தந்த நிலையில், இந்த ஆண்டு அந்த எண்ணிக்கையை 40,000 அதிகரிப்பதற்கும், எதிர்வரும் காலத்தில் 100,000 அதிகரிப்பதற்கும் இலக்கு நிர்ணயிக்கப்பட்டுள்ளது.

இந்தநிலையில், டுபாயில் நடைபெற்ற “இன்வெஸ்ட் ஸ்ரீலங்கா“ முதலீட்டாளர் மன்றத்தில் உரையாற்றிய இலங்கையின் தூதரக அதிகாரி, சுற்றுலாத்துறை மாத்திரமன்றி கட்டுமானம், விவசாயம் மற்றும் சரக்கு போக்குவரத்து துறைகளிலும் அந்நிய நாட்டு முதலீட்டாளர்களுக்கு அழைப்பு விடுத்துள்ளார்.

இதற்காக வரிச் சலுகைகள் மற்றும் மேம்படுத்தப்பட்ட அரச சேவைகள் போன்ற ஊக்குவிப்பு திட்டங்களை இலங்கை வழங்கி வருவதாகவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

# பிரதி அமைச்சர் சதுரங்க அபேசிங்க பெயரைப் பயன்படுத்தி பண மோசடி

## பொதுமக்களுக்கு அவசர எச்சரிக்கை

கைத்தொழில் மற்றும் முயற்சியாண்மை அபிவிருத்தி பிரதி அமைச்சர் சதுரங்க அபேசிங்கவின் பெயரைப் பயன்படுத்தி, இனந்தெரியாத நபர் ஒருவர் பொதுமக்களிடம் பண மோசடியில் ஈடுபட்டு வருகிறார் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

இது குறித்து அவதானமாக இருக்குமாறு பிரதி அமைச்சர் எச்சரிக்கை விடுத்துள்ளார்.

பிரதி அமைச்சரின் பிரதிநிதி எனப் பொய்யாகக் கூறிக்கொள்ளும் நபர் ஒருவர், பொதுமக்களிடம் நிதி உதவி கோருகிறார் எனவும் தனிப்பட்ட தகவல்களைத் திரட்டுகிறார் என்றும் முறைப்பாடுகள் கிடைத்துள்ளன.

இத்தகைய போலியான கோரிக்கைகளை நம்பி பொதுமக்கள் ஏமாற வேண்டாம் என அவர் கேட்டுக்கொண்டுள்ளார்.

அடையாளம் தெரியாத நபர்களிடம் பணத்தையோ அல்லது இரகசியமான தனிப்பட்ட விபரங்களையோ பகிர வேண்டாம் என கோரப்பட்டுள்ளது.

இத்தகைய சந்தேகத்திற்கிடமான அழைப்புகள் அல்லது குறுஞ்செய்திகள் கிடைத்தால், உடனடியாக அருகிலுள்ள பொலிஸ் நிலையத்திலோ




அல்லது உரிய அதிகாரிகளிடமோ முறையிடுமாறு பிரதி அமைச்சர் சதுரங்க அபேசிங்க வலியுறுத்தியுள்ளார்.

பொதுமக்கள் விழிப்புடன் இருக்குமாறும், இத்தகைய மோசடிகளில் இருந்து மற்றவர்களைப் பாதுகாப்பதற்காக இந்த எச்சரிக்கையை ஏனையோருடனும் பகிர்ந்து கொள்ளுமாறும் அதிகாரிகள் கேட்டுக்கொண்டுள்ளனர்.



# தமிழ் நாட்டைச் சேர்ந்த 14 பேர் உட்பட 131 பேருக்கு பத்ம விருதுகள் அறிவிப்பு

இந்தியாவின் 77 ஆவது குடியரசு தினத்தை முன்னிட்டு, 2026 ஆம் ஆண்டிற்கான பத்ம விருதுகளை மத்திய உள்துறை அமைச்சு நேற்று அறிவித்தது.

இதற்கமைய 2026 ஆம் ஆண்டிற்கான பத்ம விபூஷண், பத்ம பூஷண், பத்ம ஸ்ரீ விருதுகள் பெறுபவர்களின் பட்டியலை மத்திய அரசு அறிவித்துள்ளது.

113 பேருக்கு பத்ம ஸ்ரீ விருது, 13 பேருக்கு பத்ம பூஷன் விருது, 5 பேருக்கு பத்ம விபூஷன் விருது என 131 பேருக்கு பத்ம விருதுகள் அறிவிக்கப்பட்டுள்ளன.

கலை, இலக்கியம், கல்வி, மருத்துவம் மற்றும் பொதுச்சேவை எனப் பல்வேறு துறைகளில் ஈடுஇணையற்ற சாதனைகளை நிகழ்த்தியவர்களுக்கு இந்த உயரிய விருதுகள் வழங்கப்படுகின்றன.

மறைந்த பொலிவுட் நடிகர் தர்மேந்திரா, கேரளாவை சேர்ந்த கே.டி.தாமஸ், பி.நாராயணன், வி.எஸ்.அச்சுதானந்தன், கலை பிரிவில் உத்தர பிரதேசத்தை சேர்ந்த என்.ராஜத்திற்கு பத்ம விபூஷண் விருது அறிவிக்கப்பட்டுள்ளது.

பாடகி அல்கா யக்னிக், பகத் சிங் கோஷ்யாரி, மருத்துவர் கள்ளிப்பட்டி ராமசாமி பழனிசாமி, நடிகர் மம்முட்டி, டாக்டர் நோரி தத்தாத்ரேயுடு, பியூஷ் பாண்டே (மறைவு), எஸ்கேஎம் நிறுவனர் மயிலானந்தன், சதாவதனி ஆர்.கணேஷ், ஜார்க்கண்ட் முன்னாள் முதல்வர் சிபு சோரன் (மறைவு), தொழிலதிபர் உதய் கோட்டக், வி.கே. மல்ஹோத்ரா (மறைவு), வெள்ளப்பள்ளி நடேசன், டென்னிஸ் வீரர் விஜய் அமிர்தராஜ் ஆகிய 13 பேர் பத்ம பூஷண் விருதுக்கு தேர்வாகி உள்ளனர்.




நடிகர் மாதவன், மகளிர் கிரிக்கெட் அணி தலைவர் ஹர்மன்ப்ரீத் கவுர், இந்தி நடிகர் சதிஷ் ஷா (மறைவு), கிரிக்கெட் வீரர் ரோஹித் சர்மா, ஹொக்கி வீராங்கனை சவிதா பூனியா, புதுச்சேரியைச் சேர்ந்த சிலம்பக் கலைஞர் கே. பழனிவேல் உட்பட 113 பேருக்கு பத்மஸ்ரீ விருதுகள் அறிவிக்கப்பட்டுள்ளன.

தமிழகத்தைச் சேர்ந்த 2 பேருக்கு பத்ம விபூஷண், 11 பேருக்கு பத்மஸ்ரீ விருதுகள் அறிவிக்கப்பட்டுள்ளன. இதில் ஒரு பத்மஸ்ரீ விருதை 2 பேர் பங்கிட்டுக் கொள்கின்றனர். அந்த வகையில், தமிழகத்தைச் சேர்ந்த மொத்தம் 14 பேர் பத்ம விருதுகளைப் பெறுகின்றனர்.

கள்ளிப்பட்டி ராமசாமி பழனிசாமி (மருத்துவம்), எஸ்கேஎம். மயிலானந்தன் (சமூக சேவை).

கர்னாடக இசைப் பாடகிகள் ரஞ்சனி – காயத்ரி சகோதரிகள் (கலை), முன்னாள் அமைச்சர் எச்.வி. ஹண்டே (மருத்துவம்), கே.ராமசாமி (அறிவியல், பொறியியல்), முன்னாள் ஐபிஎஸ் அதிகாரி கே.விஜயகுமார் (குடிமைப்பணி), ஓதுவார் திருத்தணி சுவாமிநாதன் (கலை), புண்ணியமூர்த்தி நடேசன் (மருத்துவம்), ஆர்.கிருஷ்ணன் (கலை – மறைவு), ராஜாஸ்தபதி காளியப்ப கவுண்டர் (கலை), எழுத்தாளர் சிவசங்கரி (இலக்கியம், கல்வி), மிருதங்க வித்வான் திருவாரூர் பக்தவத்சலம் (கலை), சென்னை ஐஐடி இயக்குநர் வீ.காமகோடி (அறிவியல், பொறியியல்) ஆகியோர் விருது பெறுகின்றனர்.

பத்ம விருதாளர்கள் அனைவருக்கும் பிரதமர் மோடி வாழ்த்து தெரிவித்துள்ளார். அவர் தனது எக்ஸ் வலைதளப் பதிவில்,

“நாட்டுக்கு ஆற்றிய அளப்பரிய பங்களிப்புக்காக பத்ம விருது பெறும் அனைவருக்கும் எனது மனமார்ந்த வாழ்த்துகள். பல்வேறு துறைகளில் சிறந்து விளங்கும் தங்களது பண்பு, அர்ப்பணிப்பு மற்றும் சேவை ஆகியவை நமது சமூகத்தின் கட்டமைப்பை வலுப்படுத்துகின்றன. இந்த கவுரவம், வரும் தலைமுறையினரைத் தொடர்ந்து ஊக்குவிக்கும் அர்ப்பணிப்பு மற்றும் மேன்மையின் உணர்வைப் பிரதிபலிக்கிறது.” என்று குறிப்பிட்டுள்ளார்.

பத்ம விருதுகள் வரும் மார்ச் அல்லது ஏப்ரல் மாதம் குடியரசுத் தலைவர் மாளிகையில் நடைபெறும் விழாவில் வழங்கப்படும். விருதுகளை குடியரசுத் தலைவர் திரவுபதி முர்மு வழங்கிக் கௌரவிப்பார்.

# அழுத்தத்துக்கு அடங்கிப் போகும் ஆள்கள் நாம் இல்லை என அழுத்தமாக சொல்கிறேன்

## த.வெ.க. தலைவர் விஜய் உரை





அழுத்தத்துக்கு அடங்கிப் போகும் ஆள்கள் நாம் இல்லை என்று தமிழக வெற்றிக் கழகத்தின் தலைவர் விஜய் தெரிவித்துள்ளார்.

தமிழக வெற்றிக் கழகத்தின் செயல் வீரர்கள், நிர்வாகிகள் பங்கேற்ற கூட்டம் அக்கட்சியின் தலைவர் விஜய் தலைமையில் மாமல்லபுரத்தில் நேற்று நடைபெற்றது. இதில் விஜய் உரையாற்றுகையில்,

“நமது அரசியல் பயணத்தில் இது மிக மிக முக்கியமான காலகட்டமாகும். நான் ஏன் இதை அழுத்தமாக சொல்கிறேன் என்றால் அழுத்தத்துக்கு அடங்கி போகும் ஆள்கள் நாம் இல்லை. இது நம்மிடம் நடக்கவே நடக்காது. ‘அழுத்தம் இருக்கிறதா என்று கேட்டீர்கள்?’ என்றால், ‘அழுத்தம் இருக்கிறது’. ஆனால் அது நமக்கு இல்லை மக்களுக்குதான்.

தமிழகத்தில் இதற்கு முன்பு ஆட்சியில் இருந்தவர்கள் பாஜகவுக்கு அடிமையாகதான் இருந்தனர். அவர்களை நம்பி நமக்கு எந்தப் பயனும் இல்லை. இப்போது ஆட்சியில் உள்ள தி.மு.க. அரசை நம்பியும் நமக்கு பயன் இல்லை. ஏனெனில் இவர்கள் மறைமுகமாக சரண்டர் ஆகியுள்ளனர். அவர்கள் வேஷம் கலைந்து விடக் கூடாது என்பதற்காக ‘கலர் கலரா’, கவர்ச்சிகர அறிவிப்பு வெளியிட்டு வருகிறார்கள். அதை நீங்கள் கவனித்து இருப்பீர்கள்.

‘இவர்கள் எல்லாம் இப்படி இருக்கிறார்களே. நமக்காக உண்மையாக உழைப்பதற்கு யாராவது வந்து விட மாட்டார்களா’ என்று வெளியில் சொல்ல முடியாத அழுத்தத்தில் மக்கள் உள்ளனர். இதனால் மக்கள் இப்போது த.வெ.கவை நம்புகிறார்கள். அதனால்தான் இது நமக்கு மிக முக்கிய காலக்கட்டம் என்று சொன்னேன்.

தேர்தல் கூட்டணி குறித்து பல்வேறு யூகங்கள் நடந்து வருகிறது. விஜய் உடன் யார் வருவார்கள்? என்று நம்மை குறைத்து மதிப்பிட்டு பேசி வருகின்றனர். இது நமக்கு புதிது அல்ல. 30 ஆண்டுகளாக இதை நாம் எதிர்கொண்டு வருகிறோம். மக்கள் நமக்கென ஒரு இடத்தை கொடுத்துள்ளனர். எனது ‘கெரியரின்’ உச்சத்தை மக்கள் கொடுத்துள்ளனர். நம்மை நம்பும் மக்களுக்காக நாம் உழைக்க வேண்டும். இப்போது அது எனது குணாதிசியமாக மாறிவிட்டது.

இந்த நேரத்தில் நான் ஒன்றை சொல்ல விரும்புகிறேன். அரசியலுக்கு வந்த பிறகும் சரி, ஆட்சி அதிகாரத்துக்கு வந்த பிறகும் சரி, ஆளும் கட்சி, ஆண்ட கட்சி போல ஊழல் என்பதை செய்ய மாட்டோம். ஊழல் கரை இல்லாத ஆட்சி நடைபெறும். இது சினிமா கதை அல்ல. ஒரே நாளில் மாற்றம் நடைபெறாது. ஆனால், எதற்கும் ஆசைப் படாத ஒருவன் அரசியலுக்கு வரும் போது ஊழல் இருக்காது.

அதனால் தீய சக்தி மற்றும் ஊழல் சக்தி என இரண்டு பேரும் தமிழகத்தை ஆட்சி செய்யக் கூடாது. இந்த கட்சிகளை எதிர்க்கும் பலம் நம்மிடம்தான் உள்ளது. நீங்கள் என்ன சூழ்ச்சி செய்தாலும், என்ன அழுத்தம் கொடுத்தாலும் அடங்கிப் போகவும், அடிமையாக இருக்கவும் நாம் அரசியலுக்கு வரவில்லை. மக்களை பாதுகாக்கவே அரசியலுக்கு வந்துள்ளோம்.

மக்களுக்கு என் மீது மட்டும் நம்பிக்கை இருந்தால் போதாது. நம் உடன் பயணிக்கும் எல்லோர் மீதும் அந்த நம்பிக்கை வேண்டும். அது தொடர வேண்டும். எல்லோரும் உண்மையாக உழைக்க வேண்டும். யாருக்காகவும், எதற்காகவும் நமது அரசியலில் சமரசம் செய்யக் கூடாது. நீங்கள் எல்லோரும் ஒற்றுமையாக இருந்து, உழைக்க வேண்டும்.

மக்கள் நமக்காக வாக்களிப்பார்கள், வெற்றி பெறச் செய்வார்கள். அதில் மாற்று கருத்து இல்லை. ‘மக்களிடம் செல்’ என அண்ணா சொன்னதை நாம் பின்பற்ற வேண்டும். அண்ணா தொடங்கிய கட்சியும், அண்ணா பெயரில் உள்ள கட்சியும் அவரை மறந்து பல வருடம் ஆகிவிட்டது. நாம் அவரை மறக்கக் கூடாது. மக்களிடம் செல்ல வேண்டும், மக்களுடன் இருக்க வேண்டும், மக்களுக்காகவே இருக்க வேண்டும். அதற்காகதான் இந்த கூட்டம்.

வாக்குச்சாவடி என்பது நமக்கு ஜனநாயகக் கூடம். அங்கு ஜனநாயகம் களவு போகக்கூடாது. ஒவ்வொரு வாக்கையும் பாதுகாக்க வேண்டும். தமிழகத்தில் ஒவ்வொரு வீட்டில் உள்ள வாக்கும் நமக்கானது என்பதை உறுதி செய்யுங்கள். தமிழகத்தில் சுமார் 2 கோடி ரேஷன் அட்டைதாரர்கள் உள்ளனர். அவர்கள் வேறு வேறு கட்சியில் இருந்தாலும் இந்த விஜய் அவர்களின் வீட்டில் ஒருவனாக வாழ்ந்து வருகிறேன். அவர்கள் நம்மோடு இருக்க முடிவு செய்து விட்டார்கள். அவர்களை பாதுகாப்பாக வாக்குச்சாவடிக்கு அழைத்து வந்து, நமது ‘விசில்’ சின்னத்துக்கு வாக்களிக்க செய்யுங்கள்.

ஒன்றியம், நகரம், ஊராட்சி என இங்கு வந்துள்ள நிர்வாகிகளான நீங்கள்தான் நமது கட்சியின் ஆணிவேர். நீங்கள் எல்லோரும் சுதந்திரமாக செயல்பட வேண்டும். சுந்தந்திரமாக செயல்பட விட வேண்டும். நீங்கள் ஒவ்வொருவரும் எனக்கு முக்கியம். நீங்கள்தான் தேர்தலில் முன்கள வீரர்கள். இது வெறும் தேர்தல் அல்ல. இது ஜனநாயகப் போர். நீங்கள்தான் இதன் தளபதிகள்.

தேர்தலுக்கு இன்னும் மூன்று மாத காலம்தான் உள்ளது. உங்களது களப் பணியில் தான் நமது வெற்றி உள்ளது. உங்களுக்கு இந்த விஜய்யை பிடிக்கும் என்றால் உங்களது உழைப்பில் அதை வெளிக்காட்டுங்கள். நாம் அறிவிக்கின்ற வேட்பாளர்களுக்கு நீங்கள் முழு ஒத்துழைப்பு அளிக்க வேண்டும்.

“சொந்த நாட்டை ஒரு கூட்டம் அபகரிக்கிறது. அதனால் வேறு வழி இல்லாமல் அந்த நாட்டை விட்டு வெளியேறி மறைந்து வாழ வேண்டி உள்ளது. அதன் பின்னர் தன்னுடைய நட்பு சக்திகளுடன் பேசி அந்த நாட்டை மீட்டெடுத்தவர் யார் தெரியுமா? நம் கட்சியின் கொள்கைத் தலைவர்களில் ஒருவரான ராணி வேலுநாச்சியார். அவர்களுக்கு அந்த நட்பு சக்தியாக இருந்து உழைத்தது சின்ன மருது, பெரிய மருது மற்றும் சையது ஆகிய மூன்று பேரும்தான். அன்று ஆங்கிலேயர் படை, ஆற்காட்டு படையை அடித்து துவம்சம் செய்து, நாட்டை மீட்டெடுத்தவர் வேலுநாச்சியார். அன்று இருந்த படைகள் போல் இன்று என்னென்ன படைகள் உள்ளன என்பதை நீங்கள் அறிவீர்கள். அப்படி எத்தனை படைகள் வந்தாலும் எதிர்த்து நிற்கும் தலைமையும், சக்தியும் நம் உடன் இருக்கும் போது நம் நாட்டை நம்மால் மீட்டெடுக்க முடியாதா என்ன?

த.வெ.கவின் இந்தப் படை நட்பு சக்தி இருந்தாலும், இல்லையென்றாலும் தனியாக நின்று வெல்லும் மிகப்பெரிய படை நம்முடன் உள்ளது. முக்கியமாக தீரம் மிக்க பெண்கள் படை நம்முடன் உள்ளது.” – என்றார்.



# ஈராக் எல்லையில் பலத்த பாதுகாப்பு

சிரியாவின் வடகிழக்குப் பகுதியில் நிலவும் ஸ்திரமற்ற நிலை மற்றும் பல சிறைச்சாலைகளில் இருந்து ஐ.எஸ்.ஐ.எஸ் சந்தேகநபர்கள் தப்பியோடியுள்ளமை காரணத்தினால், ஈராக் எல்லைப் பகுதிகளில் பாதுகாப்பு பலப்படுத்தப்பட்டுள்ளதாக சர்வதேச ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன.

சிரியாவின் குர்திஷ் நிர்வாகத்தின் கீழிருந்த சிறைச்சாலைகள் மற்றும் தடுப்பு முகாம்களை சிரிய அரசாங்கப் படைகளிடம் ஒப்படைக்கும் பணியின் போது ஏற்பட்ட பதற்றமான சூழ்நிலையைப் பயன்படுத்தி, சுமார் 200 ஐ.எஸ்.ஐ.எஸ் சந்தேகநபர்கள் தப்பியோடியுள்ளனர் என தெரிவிக்கப்படுகிறது.

இந்தச் சம்பவத்தைத் தொடர்ந்து, சிரியாவுடனான ஈராக் எல்லைப் பகுதிகளில் பாதுகாப்புப் படையினர் மற்றும் பொலிஸார் விழிப்புடன் இருக்குமாறு அறிவுறுத்தப்பட்டுள்ளனர்.

தப்பியோடிய சந்தேகநபர்களில் பெரும்பாலானோர் தற்போது மீண்டும் கைது செய்யப்பட்டுள்ளனர் என சிரிய பாதுகாப்புப் பிரிவினர் தெரிவித்துள்ளனர்.



# அமெரிக்க இராணுவத்தில் இணைகிறது மிகவும் அபாயகரமான போர் விமானம்

எதிரிகளின் ரேடாரில் சிக்காத, 'மிகவும் அபாயகரமான' போர் விமானம் என்று கூறப்படும், 'எப்-47' விரைவில் அமெரிக்க இராணுவத்தில் இணைய உள்ளது.

அமெரிக்கா தன் இராணுவ பலத்தை மேம்படுத்த, பல்வேறு புதிய தொழில்நுட்பங்களுடன் கூடிய ஆயுதங்களை உருவாக்கி வருகிறது.

இதேபோன்று கடற்படை, விமானப் படைகளிலும் அதிநவீன கப்பல்கள், விமானங்களை தயாரித்து வருகிறது.

அதன் ஒரு பகுதியாக, எப் - 47 என்ற ரேடாரில் சிக்காத ஆறாம் தலை



முறை போர் விமானங்களை தயாரிக்கும் ஒப்பந்தத்தை, 'போயிங்' நிறுவனம் பெற்றது.

இதன் முதல் போர் விமானம், விரைவில் அமெரிக்க விமானப் படைக்கு கிடைக்க உள்ளதாக, அமெரிக்க ஜனாதிபதி டொனால்ட் ட்ரம்ப் தெரிவித்தார்.

இந்த விமானத்தின் வடிவமைப்பு, முதன்மை இறக்கைகள் மற்றும் காக்பிட் அருகே, 'கனார்ட்' எனப்படும் சிறிய இறக்கைகளுடன் கூடியதாக உள்ளது.

இவை கூர்மையான திருப்பங்கள், தாக்குதலின் போது விமானத்தின் சமநிலை, முன்-பின் சாய்வு கட்டுப்பாடு ஆகியவற்றுக்கு பயன்படுகின்றன.

இது, நீண்ட தூர பயணத்துக்கு ஏற்ற திறன் பெற்றுள்ளது.

இந்த விமானங்களின் தயாரிப்பு துவங்கியுள்ள நிலையில், 2030ம் ஆண்டுக்குள் விமானப்படையில் முழுதும் இணையும் என எதிர்பார்க்கப்படுகிறது.




# சக்திவாய்ந்த பனிப்புயல் காரணமாக ஸ்தம்பிதமடைந்தது அமெரிக்கா

அமெரிக்காவின் கிழக்கு மாகாணங்களை தாக்கியுள்ள சக்திவாய்ந்த பனிப்புயல் காரணமாக, அந்த நாட்டின் இயல்பு வாழ்க்கை முற்றிலும் பாதிப்படைந்துள்ளது.

இந்தப் பனிப்புயல் காரணமாக சுமார் 500,000 வீடுகள் மற்றும் வணிக நிறுவனங்களுக்கான மின்சார விநியோகம் தடைப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

அமெரிக்காவின் டெக்சாஸ், லூசியானா மற்றும் டென்னெசி ஆகிய மாநிலங்கள் கடுமையாகப் பாதிக்கப்பட்டுள்ளன என சர்வதேச ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன.

இந்தநிலையில், நேற்று மாத்திரம் சுமார் 9,600 இற்கும் மேற்பட்ட விமான சேவைகள் இரத்து செய்யப்பட்டுள்ளன.

இதன் காரணமாக ஆயிரக்கணக்கான பயணிகள் விமான நிலையங்களிலேயே நிர்க்கதிக்குள்ளாகி உள்ளனர் என தெரிவிக்கப்படுகிறது.

இதனிடையே, தெற்கு கரோலினா, வேர்ஜினியா, ஜோர்ஜியா மற்றும் மேரிலாண்ட் உள்ளிட்ட 12 மாநிலங்களில் மத்திய அவசரக்கால நிலை பிரகடனப்படுத்தப்பட்டுள்ளது.



# இன்றைய ராசி பலன்கள் -26.01.2026




நீங்கள் உங்களை வளர்த்துக் கொள்ள வேண்டும். உயர்ந்த இலட்சியத்தைக் கொள்ள வேண்டும்.

உங்கள் திறமைக்கு மேலதிகாரிகளின் பாராட்டு கிடைக்காது. இது உங்களை பாதிக்காமல் பார்த்துக் கொள்ளுங்கள். சிறந்த முறையில் பணியாற்றுங்கள்.

உங்கள் துணையுடன் சூடான விவாதங்கள் நடக்க வாய்ப்புள்ளது. நீங்கள் இருவரும் மற்றவர்களின் தேவையை புரிந்து கொள்ள வேண்டும்.

இன்று நிதி வளர்ச்சி காணப்படாது. செலவுகள் அதிகமாக காணப்படும்.

கால் வலியால் அவதிப்படுவீர்கள். முறையான உடற்பயிற்சி உங்கள் ஆரோக்கியத்துக்கு நல்லது.




சிக்கல்களில் சிக்காமல் இருக்க இன்று உங்கள் செயல்களில் பொறுமை தேவை.இன்று முக்கிய முடிவுகள் எடுக்க உகந்த நாள் அல்ல.

உங்கள் சக பணியாளர்களுடன் சில பிரச்சினைகள் ஏற்படும். இதனால் உங்கள் பொறுப்புகளை நிறைவேற்றுவதில் தடைகள் இருக்கும்.

உங்கள் துணையுடன் தொடர்பு கொள்கையில் கவனம் தேவை. எரிச்சலூட்டும் நடத்தை அல்லது கடுமையான வார்த்தைகள் உறவின் நல்லிணக்கத்தை பாதிக்கும்.

நிதி சம்பந்தமான முக்கிய முடிவுகள் தவிர்ப்பது நல்லது. இல்லையெனில் நஷ்டம் ஏற்பட வாய்ப்புள்ளது.

அதிக உடல் உழைப்பின் காரணமாக கால் வலி ஏற்படலாம். உடல் நலத்தில் கவனம் செலுத்தவும்.




இன்று அதிர்ஷ்டகரமான நாளாக இருக்காது. என்றாலும் உங்கள் கடின முயற்சி மூலம் உங்கள் திறமைகளை நிரூபிக்கலாம். தடைகளைக் கண்டு லட்சியத்திலிருந்து விலகாதீர்கள்.

பணியில் தவறுகள் நேரலாம். இதனால் உங்கள் மேலதிகாரிகளின் அதிருப்திக்கு ஆளாகலாம். சிறிது கவனமுடன் இருக்கவும்.

உங்கள் துணையுடன் கடுமையாகப் பேசுவீர்கள் அல்லது வன்மையுடன் நடந்து கொள்வீர்கள். இது உங்கள் மகிழ்ச்சியை கெடுக்கும்.எனவே இதனை தவிர்த்தல் வேண்டும்.

இன்று செலவுகள் அதிகமாக காணப்படும். நிதிநிலைமையில் ஸ்திரத்தன்மை பராமரிப்பதை கடினமாக உணர்வீர்கள்.

செரிமானம் சம்பந்தமான பிரச்சினைகள் ஏற்பட வாய்ப்புள்ளது. அதிக நீரைப் பருகவும்.




இன்று வாய்ப்புகள் நிறைந்து காணப்படும். என்றாலும் முடிவெடுக்கும் போது நீங்கள் கவனமாக இருக்க வேண்டும்.

நீங்கள் எளிதாக பணியாற்றுவீர்கள். பணியிடத்தில் உங்கள் திறனுக்கான அங்கீகாரம் கிடைக்கப்பெறுவீர்கள். ஊக்கத்தொகையாக பண வரவு அதிகரிக்கும் வாய்ப்பு உள்ளது.

உங்கள் துணையுடன் மகிழ்ச்சியான தருணங்களை ஒன்றாக இணைந்து பகிர்ந்து மகிழ்வீர்கள்.

இன்று பண வரவு திருப்திகரமாகவும் போதுமானதாகவும் இருக்கும்.

பெரிய அளவிலான ஆரோக்கியப் பிரச்சினை ஏதும் காணப்படாது.




தகவல் பரிமாற்றங்களை கவனமாகக் கையாள வேண்டும். யதார்த்தமாக இருக்க வேண்டியது அவசியம். பொறுமையைக் கையாள வேண்டும்.

சில பணிகள் குறித்தநேரத்தில் முடியாது. உங்கள் நேரத்தை பயனுள்ளதாக ஆக்க திறமை தேவை.

நீங்கள் உணர்ச்சிவயப்பட்டு அந்த உணர்வை உங்கள் துணையிடம் வெளிப்படுத்துவீர்கள். இதனால் அமைதியின்மை ஏற்படும்.

நிதிநிலைமை அதிர்ஷ்டகரமாக இருக்காது. அதிக செலவினங்கள் காணப்படும்.

பல் வலிக்கான சாத்தியம் உள்ளது. உங்கள் ஆரோக்கியத்தை கவனித்துக்கொள்ள வேண்டும்.




தவறுகள் செய்ய வாய்ப்புள்ளதால் பணியில் அதிக கவனம் தேவை. பொறுப்புக்களின் காரணமாக இன்று பணிகளில் மும்மரமாக இருப்பீர்கள்.

உங்கள் உணர்வுகளை உங்கள் துணையிடம் வெளிப்படுத்துவீர்கள். உறவில் நட்பான அணுகுமுறை சிறந்தது.

செலவுகள் அதிகமாக இருக்கும். நிதிநிலையில் சமநிலையைப் பராமரிப்பது இன்று கடினமாக உணர்வீர்கள்.

சளி அல்லது இருமல் பாதிப்புகள் ஏற்படலாம். ஆரோக்கியத்தில் கவனம் செலுத்தவும்.




இன்றைய நாளின் விளைவுகள் உங்களுக்கு சாதகமாக அமையும். இன்று நீங்கள் முக்கிய முடிவுகள் எடுக்கலாம்.

உங்கள் பணியில் திருப்தி கிடைக்கும். சகபணியாளர்களும் தரவாக இருப்பார்கள்.

உங்கள் துணையிடம் அன்பாக நடந்து கொள்வர்கள். இதனால் உறவின் பிணைப்பு வலுப்படும்.

நிதிநிலைமை மகிழ்ச்சிகரமாக இருக்கும். இன்று வரும் வாய்ப்புகளை பயன்படுத்திக் கொள்ளுங்கள்.

இன்று பொதுவாக ஆரோக்கியம் சிறப்பாக இருக்கும்.




தைரியத்துடனும் உறுதியுடனும் முன்னேறுவீர்கள். இன்று முக்கியமான முடிவுகளை எடுப்பதற்கு உகந்த நாள்.

பணியிடத்தில் உங்கள் திறமைகளை நிரூபிக்க போதுமான வாய்ப்புகள் காணப்படும். உங்களுக்கு கொடுத்த வேலையை குறித்தநேரத்திற்குள் முடிப்பீர்கள்.

உங்கள் துணையுடன் இனிமையாகப் பேசுவீர்கள். இதனால் மகிழ்ச்சி நிறைந்திருக்கும்.

நிதிநிலைமை இன்று சிறப்பாக இருப்பதன் காரணமாக உங்களின் சேமிப்பதற்கான வாய்ப்பு அதிகரிக்கும்.

இன்று ஆரோக்கியம் சிறப்பாக இருக்கும்.

# இன்றைய ராசி பலன்கள் -26.01.2026




இன்று அனுகூலமான நாள். நீங்கள் விரைந்து செயலாற்றுவீர்கள். இன்று அதிர்ஷ்டம் காணப்படும்.

உங்கள் கீழ் பணிபுரிபவர்களின் ஒத்துழைப்பையும் ஆதரவையும் பெறுவீர்கள். உங்கள் திறமை உங்கள் மேலதிகாரிகளால் பாராட்டப்படும்.

உங்கள் துணையுடன் வெளியிடங்களுக்கு செல்வீர்கள். இருவருக்குமிடையே மகிழ்ச்சி காணப்படும்.

உங்கள் நிதிநிலைமை சிறப்பாக இருக்கும். உங்கள் வங்கியிருப்பு அதிகரிக்கும்.

இன்று ஆரோக்கியம் தடையாக இருக்காது.




இன்று தன்னம்பிக்கை குறைந்து காணப்படும். நம்பிக்கையை வளர்த்துக் கொள்ள வேண்டியது அவசியம். மனதில் குழப்பம் இருக்கும் என்பதால் முக்கியமான முடிவுகள் எடுப்பதை தவிர்க்கவும்.

பணியில் நீங்கள் எதிர்பார்த்த பலன்கள் கிடைக்காது. உங்கள் பணிகளை திட்டமிட்டு ஆற்ற வேண்டும்.

உங்கள் துணையுடன் கருத்து வேறுபாடு காணப்படும். அமைதியைப் பராமரிக்க வேண்டும்.

செலவுகள் அதிகரிக்கும் என்பதால் நீங்கள் கவனமாக இருக்க வேண்டும். தேவையற்ற செலவுகள் ஏற்படும்.

சளி, இருமல் அல்லது தலைவலி ஏற்பட வாய்ப்புள்ளது. உங்கள் ஆரோக்கியத்தைக் கவனமாகப் பார்த்துக் கொள்ளவும்.




உங்கள் முன்னேற்றத்துக்கான முயற்சிகளை எடுப்பீர்கள். உங்கள் லட்சியங்களை அடைய நீங்கள் சில சௌகரியங்களை விட்டுக் கொடுக்க வேண்டும். வாழ்வில் வரும் மாற்றங்களை நடைமுறைப்படுத்த தைரியமாக இருங்கள்.

உங்களது தற்போதைய பணியில் திருப்தியின்மை காணப்படும். மேலும் உங்கள் வளர்ச்சிக்காக பணி மாற்றம் விரும்புவீர்கள்.

உறவில் புரிந்துணர்வை பராமரிக்க உங்கள் துணையை அனுசரித்து நடந்து கொள்ள வேண்டும்.

இன்று குறைந்த அளவு பண வரவே காணப்படும். அதிக பொறுப்புகள் காரணமாக அதிகமாக செலவு செய்ய நேரும்.

கண் சம்பந்தமான பிரச்சினைகள் காணப்படும். உங்களை நன்கு கவனித்துக் கொள்ளுங்கள்.




உங்கள் முயற்சிகளில் நீங்கள் விரும்பும் பலன் கிடைக்கும். இன்று எதிர்பாராத சில நன்மைகள் உங்களுக்கு மகிழ்ச்சியை தரும்.

இன்று நீங்கள் விரைவாகப் பணியாற்றுவீர்கள்.அதையும் எளிதாக ஆற்றுவீர்கள்.

உங்கள் துணையுடன் இனிமையான தருணங்களை கழிப்பீர்கள். இது உங்களுக்கு மகிழ்ச்சியை அளிக்கும்.

பணப்புழக்கம் அதிகமாக காணப்படும். உங்கள் வங்கியிருப்பு அதிகரிக்கும்.

இன்று ஆற்றலுடனும் ஆரோக்கியத்துடனும் காணப்படுவீர்கள்.

# தோட்டத் தொழிலாளர்களின் சம்பள அதிகரிப்பு இந்த ஜனவரி முதல் நடைமுறைக்கு வருகின்றது

## பிரதியமைச்சர் பிரதீப் தெரிவிப்பு



(மஸ்கெலியா விசேட நிருபர்)

தோட்டத் தொழிலாளர்களின் பிரச்சினைகளுக்குத் தீர்வுகளை வழங்கி, ஜனாதிபதியின் தலையீட்டுடன் அவர்களது சம்பளத்தை உயர்த்துவதற்கு அரசாங்கம் நடவடிக்கை எடுத்ததற்கமைய ஜனவரி மாதம் முதல் அந்தத் தொகை தொழிலாளர்களுக்கு வழங்கப்படும் எனப் பிரதியமைச்சர் சுந்தரலிங்கம் பிரதீப் தெரிவித்தார்.

இதற்காக வரவு – செலவுத் திட்டத்தில் ஐந்நூறு கோடி ரூபா ஒதுக்கப்பட்டுள்ளமையையும் அவர் சுட்டிக்காட்டினார்.

நேற்றுய் கொடக்கவெல பகுதியில் அமைந்துள்ள தேசிய மக்கள் சக்தி அலுவலகத்தில் நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்துகொண்டு கருத்துத் தெரிவிக்கும் போதே அவர் இதனைக் குறிப்பிட்டார்.

அங்கு மேலும் கருத்துத் தெரிவித்த பிரதியமைச்சர் – கடந்த காலங்களில் ஆட்சி செய்த அரசாங்கங்களிடம் தோட்டத் தொழிலாளர்கள் சம்பள உயர்வு கோரி பல போராட்டங்களை முன்னெடுத்த போதிலும், அவற்றுக்கு எவ்வித சாதகமான முடிவுகளும் கிடைக்கவில்லை.

எனினும் தற்போதைய அரசாங்கம் ஆட்சிக்கு வரும்போது தோட்டத் தொழிலாளர்களின் சம்பளத்தை உயர்த்துவதாக வாக்குறுதி அளித்திருந்தது. அந்த வாக்குறுதி இன்று நிறைவேற்றப்பட்டுள்ளது.

தோட்டத் தொழிலாளர்களின் அனைத்து அடிப்படை வசதிகளையும் மேம்படுத்திக் கொடுக்க அரசாங்கம் என்ற ரீதியில் அர்ப்பணிப்புடன் செயற்படுவோம். – என தெரிவித்தார்.